

ராஜ பீடி கம்பெனி, கொழும்பு-14



★ ★
Registered as a News paper in Ceylon விலை சதம் 10

# ஈழநாடு
THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily
மலர் 9 [17-1-68] இதழ் 338
யாழ்ப்பாணம்பிலவங்க தை 3 ஷவ்வால் 16 புதன்கிழமை





ராஜ பீடி கம்பெனி, கொழும்பு-14


# மாவட்ட சபை மசோதா 26-ந் திகதி சமர்ப்பிக்கப்படும்

## கட்சித் தலைவர்களுக்கு பிரதமர் அறிவிப்பு?

யாழ்ப்பாணம், புதன்

மாவட்டசபைமசோதா இம்மாதம் 26-ந் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுமென நம்பிக்கையான வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது. இதற்கு முன்னர் இம்மாதம் 20-ந் திகதி அரசாங்கக்கட்சி குழுக்கூட்டத்தில் இம்மசோதா ஆராயப்படவிருக்கிறது. இதுபற்றி கட்சித் தலைவர்களுக்கு, பிரதமர் அறிவித்துள்ளதாகவும் தெரியவருகிறது.

ஸ்தல ஸ்தாபன மந்திரி திரு. எம். திருச்செல்வம் தயாரித்த இம்மசோதா, பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்கு தேசிய அரசாங்கத்திலுள்ள எல்லா கட்சிகளும், சம்மதம் தெரிவித்துள்ளதாக தெரியவருகிறது.

மேற்படி மசோதாமீது சுதந்திரமாக வாக்களிக்க அனுமதிவேண்டுமென அரசாங்கக் கட்சியிலுள்ள பல அங்கத்தவர்கள், குறிப்பாக முஸ்லீம் அங்கத்தவர்கள் கோரியுள்ளனராம்.

யாழ்ப்பாணத்தில் நடந்த தமிழரசு வாலிப முன்னணி செயற்குழுக் கூட்டத்தில் மாவட்டசபைபற்றி ஏற்கனவே நிறைவேற்றியுள்ள தீர்மானத்தை வலியுறுத்தி மற்றொரு தீர்மானம் நிறைவேற்றியது.

[8-ம் பக்கம் பார்க்க]

மாவட்டசபைகளில்

## சிறுபான்மைத் தமிழர் குரல் ஒலிக்கும்

### திரு. அமிர்தலிங்கம் தகவல்

யாழ்ப்பாணம், புதன்

"மாவட்டசபைகளில் சிறுபான்மைத் தமிழ்மக்களுக்கும் உறுப்பினர்களாகவர சந்தர்ப்பமளிக்கும்படி நாம் சிபார்சு செய்துள்ளோம். இவ்வாறு தெரிவுசெய்யப்படும் உறுப்பினர்களால், சிறுபான்மைத் தமிழர்களின் குரல் மாவட்டசபைகளில் ஒலிக்கும். சிறுபான்மைத் தமிழ் உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படாத பட்சத்தில், நியமன அங்கத்தவர்களாக அவர்களுக்கு இடம் கிடைக்கும்படி வசதி செய்யவேண்டும் என்றும் சிபார்சுசெய்துள்ளோம்"

ஆனைக்கோட்டை திருவள்ளுவர் சேவா சனசமூக நிலையத் திறப்புவிழாவின்போது வட்டுக்கோட்டை எம். பி. திரு. ஏ. அமிர்தலிங்கம் பேசும்போது மேற்கண்டவாறு கூறினார்.

(5-ம் பக்கம் பார்க்க)

## 'துப்பாக்கிச்சூடுபட்டு தகப்பனர் கீழே விழுந்தார்'

குரும்பசிட்டி, புதன்

சங்கானை நிச்சாமம்கிராமத்தைச்சேர்ந்த வல்லிபுரம் செல்லமுத்து கொலையுண்டது சம்பந்தமாக ஸ்தல விசாரணை நேற்று மல்லாகம் நீதிபதி திரு சண்முகலிங்கம் முன்னிலையில்நடைபெற்றது

விசாரணையின் போது இறந்தவரின் மகன் செல்லமுத்து செல்வரத்தினம் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

இவ்வருடம் தை மாதம் 14-ந் திகதி காலை 5 மணியளவில் வீட்டிலிருந்து எனது தகப்பன் கையில் கடகத்துடன் சந்தைக்கு வயலின் ஊடாகச் சென்றுகொண்டிருந்தார். அச்சமயம் சுமார் 20 யார் தொலைவில் நான் சைக்கிளில் அவரைப் பின் தொடர்ந்து சென்றுகொண்டிருந்தேன். திடீரென நிச்சாமம் தெருவின் எதிராக மூவர் வருவதைக் கண்டேன்,

(8-ம் பக்கம் பார்க்க)

வருகிற 24-4-68-இல் நடைபெற இருக்கும் மாணவ ஆசிரியர் பரீட்சைக்குரிய 'பொது அறிவும்-உள்ளூர் அறிவும்' மாதிரி வினாக்களை 2-ம் பக்கத்தில் காண்க.

## அரைநாளில கட்டப்பட்ட வீடு

சென்னை, ஜன. 16

கோயம்புத்தூரில் ஒரு வீடு கட்டுவதற்கான அடிக்கல்லை உபஜனாதிபதி திரு. வி. வி. கிரி காலையில் நாட்டினார் அதேவீட்டின் கட்டடத்தை பிற்பகலில் திறந்தும்வைத்தார். அரைநாளில் கட்டிமுடிக்கப்பட்ட அந்தவீட்டின் அமைப்பை மத்திய அரசின் வீடமைப்பு மந்திரி வந்து பார்க்கவேண்டும் என்று திரு. கிரி அபிப்பிராயம் தெரிவித்தார். ரூ. 1000 செலவில் கட்டப்பட்ட இந்தவீடு தீயினால் பாதிக்கப்படமாட்டாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது

## சதிமுயற்சி வழக்கு விசாரணை ஆரம்பம்

கொழும்பு, புதன்

மகாராணிக்கு எதிராக போர் தொடுக்கவும், அரசாங்கத்தை வீழ்த்தவும் சதிபுரிந்ததாக 22 பேர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ள வழக்கு இன்று ஹல்ஸ்டோப்பிலுள்ள சுப்ரீம்கோர்ட்டின் விசேஷ நீதிமன்றத்தில் சிங்களம் பேசும் விசேஷ ஜூரர் சபையின்முன் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

22 எதிரிகளும் தாம்குற்றவாளிகள்அல்லவென்றுதெரிவித்தனர். ஜூரர்கள் வந்து தங்கள்ஆசனங்களில் அமர்ந்ததும், அட்டோர்னி ஜெனரல் ஜனப் ஏ. சி. எம். அமீர் தாம் சில விஷயங்களைக் கோர்ட்டில் தெரிவிக்க வேண்டியிருப்பதால் ஜூரர்கள் வாபஸாகவேண்டும் என்றுகேட்டுக்கொண்டார்: அந்தக்கோரிக்கைக்கு கோர்ட்டார் அனுமதித்ததின்பேரில் ஜூரர்கள் வாபஸாகினர்கள். அதன்பின் அட்டோர்னி ஜெனரல் தமது கருத்துக்களைச் சமர்ப்பித்தார்.

இந்த வழக்கில். ஹேவபிட்டி கெதர ஞானசிக தோரோ முன்னாள் ராணுவத்தளபதி ஜேமர் ஜெனரல் உடுகம ஆகியவர்கள் உட்பட 22 பேர் மீதும் 1966-ம் ஆண்டு அரசாங்கத்தை வீழ்த்த சதிபுரிந்ததாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. இவ்வழக்கினை நீதியரசர் ஜி. பி. ஏ. டி சில்வா தலைமையில் நீதியரசர் வி. சிப்பிரமணியம், நீதியரசர் வி, தென்னக்கூன் ஆகியவர்கள் விசாரிக்கின்றனர்.


உங்கள் அபிமான மில்க்வைற் சோப் ஸ்தாபனத்தார்
முற்றிலும் சீர்திருத்தி தயாரிக்கும்




மில்க்வைற் பார் சோப்பை

அறிமுகப்படுத்துகிறார்கள்.

2 றுத்தல் பாரமுள்ள ஒரு பார் சோப்பின் விலை ரூபா 1/40 மட்டுமே!

அதிக லாபமடைய மில்க்வைற் பார் சோப்பை வாங்க மறவ தீர்கள்

* பார் சோப்பின் மேல் உறைகளைச் சேகரியுங்கள். பரிசுத் திட்டத்தை எதிர்பாருங்கள். *

ஒரு நற்செய்தி!

எமது கொழும்பு மாநகர் அபிமானிகளின் நலன்கருதி ஒரு கிளை விற்பனை நிலயம் 109/1, புதிய கதிரேசன் கோவில் வீதி, (மேல்மாடி) கொழும்பு-13ல் திறந்திருக்கின்றோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### இலவசம்

மில்க்வைற் பார் சோப் மேலுறைகள் ஐந்து சேகரித்து தருபவர்களுக்கு 31-1-1968 வரை ஓர் அழகான சாந்திய நீதக்கலண்டர் இலவசமாக வழங்கப்படும். மில்க்வைற்சோப் தொழிற்சாலை, யாழ்ப்பாணம். 2073

### கல்வி

வகுப்புக்கள்:-

மாணவ ஆசிரியர்களுக்கான பரீட்சை (ஆங்கிலம், விஞ்ஞானம், வர்த்தகம், சாதாரணம்) G.C.E உயர்தரம் (ஆசிரியர் தில்லையம்பலம், யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை) விண்ணப்பங்கள்:- 1-2-68 மூன். நடைபெறும் வகுப்பு:- G. C. E. சாதாரணம். பதிவாளர் கொலிஜ் ஓவ் எடியூக்கேசன் (College of Education) பழைய பஸ்நிலையம் எதிராக யாழ்ப்பாணம். 2068

ஜீ. சி. ஈ. கலை, விஞ்ஞானம் / வர்த்தகம் பயிற்றப்பட்ட பட்டதாரிகள் மூலம் வகுப்புகள் நடாத்தப்படும், எங்கள் மாணவர்கள் நூற்றுக்கு நூறுவீதம் சித்தியடைகின்றனர். ஐக்கிய கலாசாலை, நெல்லியடி, கரவெட்டி / 107, பருத்தித்துறை வீதி, நல்லூர். யாழ்ப்பாணம் / 179, பிரதான வீதி, கல்முனை. 2052

வகுப்புகள்

ஜீ. சி. ஈ. (ord & Adv.) G.A.Q. G.S.Q. மாணவ ஆசிரியர் பரீட்சை முதலியவற்றிற்கு வகுப்புகள் 16-1-68 முதல் ஆரம்பமாகிவிட்டன. இ. செல்வராஜா B. Sc., (Cey.) இரத்தினம்போதனு கழகம், நல்லூர் சந்தை கல்வியங்காடு. 2081

### விற்பனைக்கு

நாய்க்குட்டிகள்

கலப்பற்ற அல்சேசன் பப்ஸ் ஒருமாதம் சென்ற ஆண் ரூபா 125. பெண் ரூபா 100. விபரங்களுக்கு வீரசிங்கி கோட்டை, யாழ்ப்பாணம். 2077

பெரிய முகட்டு வளைகள் சப்புகள், சிலாகைகள் விற்பனைக்குண்டு 22-1-68 க்கு முன் பார்வையிடலாம். சிவசந்திரன் 55, ஆஸ்பத்திரி வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம். 2078

### தேவை

விற்பனையாளர்கள்

நாங்கள் தயாரிக்கும் பொருட்களை வீடுகளுக்கு விற்பனை செய்வதற்கு ஆண்களும் பெண்களும் தேவை. அனுபவமுள்ள சொந்தச் சைக்கிள் வைத்திருப்பவர் விரும்பத்தகுந்தது. பெண்களுக்கு வாகன வசதியும் நல்ல ஊதியமுமுண்டு. 19-1-68 நேரில் வரவும். ஷணுஸ் பஸ் ஸ்ராண்ட், எதிரில் யாழ்ப்பாணம். 2079

ஆசிரியர்

வர்த்தகபாடங்கள் படிப்பிப்பதற்கு ஆசிரியர்கள் தேவை. நேரில் விண்ணப்பிக்கவும். இரத்தினம் போதனு கழகம் நல்லூர் சந்தை, கல்வியங்காடு. 2080

### தேவை

கிளார்க்

கொக்குவில் மேற்கு ஞான பண்டித வைத்தியசாலைக்கு எழுத்து வேலைக்கு [கிளார்க்] ஆள் தேவை. ஆண்—பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். 15-1-68 முதல் 19-1-68 வரை நற்சாட்சிப் பத்திரங்களுடன் நேரில் வரவும். டாக்டர் ந. சண்முகராசா, ஆனைக்கோட்டை வீதி, கொக்குவில். 1911

### காணவில்லை

ஊரெழு மேற்கு அம்பாள் ஸ்ரோரில் இருந்த இராசையா என்னும் 14 வயது இந்தியத் தமிழ் சிறுவனை 13-ம் திகதி அதிகாலை தொடக்கம் காணவில்லை கடைசியாக வேட்டியும் நீலச் சேட்டும் அணிந்திருந்தான், பொதுநிறம். உயரம் 4.1/2 அடி. தகவல் மிக அண்மையிலுள்ள பொலிசுக்கு அல்லது மேற்கூறிய விலாசத்துக்கு அறிவிப்பவருக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும். 2074

தெமட்டக்கொடை அரசினர் தமிழ் வித்தியாலய திரு. சு. மகாலிங்கத்தின் நாட்குறிப்பு, 4 ஆங்கில நூல்கள் முக்கியமான பாடக்குறிப்புகள் கொண்ட பார்சல் தைப்பொங்கலன்று மாலை 8ரிமலை [769] பஸ்ஸில் தவறிவிட்டது. கண்டெடுத்தோர் அதனை 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைப்பின் ரூபா 25 சன்மானம் வழங்கப்படும். 2076

### விசேட அறிவித்தல்

உயர் கலைக் கல்லூரி யாழ்ப்பாணம் 14-1-68-ல் நடைபெற்ற அதிட்டச் சீட்டிழுப்பு முடிவுகள் பரிசு பெற்ற இலக்கங்கள்:

1-ம் பரிசு இல. 2329
2-ம் பரிசு இல. 570
3-ம் பரிசு இல. 2213
4-ம் பரிசு இல. 530
5-ம் பரிசு இல. 2217

410

### WANTED

A chartered Accountant requires an audit assistant with minimum five years experience in auditing and preparing final accounts to work in Jaffna. Apply statingqualificat on, experience, age and salary required - C/o. Advt. No. 2075 Eela Nadu Ltd Jaffna.

2075

### வேலை தேவை

10 வருடமாக ஆசிரியர் தொழில் அனுபவமுள்ள ஆசிரியருக்கு வேலை தேவை. தமிழ்மூலம் சிங்களம், ஆங்கிலம் G. G. E. வரை கற்பிக்க தகுதிபெற்றவர். C/o ஈழநாடு. 1910

# 3 லட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் சிக்கின
## சந்தேக நபர்கள் தப்பிவிட்டனர்

நல்லூர், செவ்.

மூன்றுலட்சம் ரூபா பெறுமதியான டிராக்டர் உதிரிப்பாகங்கள், சைக்கிள் உதிரிப்பாகங்கள் 600 உயர் ரக சேலைகள் விலையுயர்ந்த சேட்டுகள் ஆகியவற்றை இராணுவகோஷ்டி கைப்பற்றியது. இவற்றை இந்தியாவிலிருந்து சட்டவிரோதமாக இலங்கைக்குக் கடத்தி வந்தனரென சந்தேகிக்கப்படுகிறது.

துன்னாலை கடற்கரையில் வைத்து வல்வெட்டித்துறை இராணுவத் தளபதி திரு. எல். பமகொட தலைமையில் சென்ற இராணுவ கோஷ்டியினர் இப் பொருட்களை கைப்பற்றினர்.

இராணுவத்தினர் ஸ்தலத்திற்கு விரைந்ததைக் கண்டதும் பொருட்களைக் கடத்திவந்ததாகக் கருதப்படும் சந்தேகநபர்கள் வேறொரு கட்டுமரத்தின் உதவியுடன் ஆழ்கடலில் சென்று தப்பிவிட்டனர்.

கைப்பற்றப்பட்ட பொருட்கள் யாழ்ப்பாண உதவி சுங்க அதிகாரி திரு. எல். விமலதர்மாவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## நீரில் மூழ்கி சிறுமி மரணம்

நயினாதீவு, செவ்வாய்

தந்தையுடன் குளத்தில் குளிக்கச் சென்ற பெண் குழந்தை மரணமான பரிதாபகரச் சம்பவமொன்று இங்கு நடைபெற்றுள்ளது.

நயினாதீவு 5 ஏ வட்டாரத்திலுள்ள கந்தன் - நாகமணி என்பவரின் 7 வயதுடைய பங்கசாம்பாள் என்னும் குழந்தை தனது தந்தையாருடன் பெருங்குளம் என்னும் குளத்தில் குளிக்கும்போது தண்ணீரில் மூழ்கி இறந்துவிட்டது. மரண விசாரணை அதிகாரி திரு. வை. மருதமுத்து, குழந்தை தண்ணீரில் மூழ்கி மூச்சுத் திணறியதால் மரணம் ஏற்பட்டதெனத் தீர்ப்பளித்தார்.







கோயா சோப்பும் டால்க் பவுடரும் உங்கள் ஆசைகளை நனவாக்கும் அரிய வனப்பை வழங்குகின்றன...........

கண வேளையில் உலகின் நாகரிகத் தலை நகரங்களின் ஒய்யார அழகு மாதர்களில் நீங்களும் ஒருவராகி விடுகிறீர்கள்...........

உலகின் தலை சிறந்த வாசனைத் தயாரிப்பாளர்கள் சீர் செய்தளிக்கும் கோயாவின் வனப்பூட்டும் பவுடரும் சோப்பும் தரும் வாசனையில் மிதந்து வரும் பெண்ணின் பெருமையே பெருமை!

கோயாவின் பெயர்பெற்ற வாசனை ரகங்களில் விரும்பியதைத் தேர்ந்தெடுங்கள்.

கோயா லண்டன் - பரிஸ் - நியூயார்க்

மாநகரங்களில் மகிமை பெற்றது கோயா

ரெக்கிட் அன்ட் கோலமன தயாரிப்பு


# பொது அறிவும் உள்ளூர் அறிவும்

### வினாக்கள்

1. மேற்கு ஜேர்மனியின் ஜனாதிபதி [President] யார்?
2. இந்தியக் குடியரசின் உப ஜனாதிபதி [Vice-President] யார்?
3. துறைமுகச் சரக்குக்கூட்டுத்தாபனத்தின் பொது முகாமையாளர் [G. M] பெயர் யாது?
4. பைபிளை முதன்முதலாக தமிழாக்கம் செய்தவர் யார்?
5. இலங்கையின் முதல் பத்திரிகை எது?
6. இலங்கையின் கடைசி பிரிட்டிஷ் தேசாதிபதி யார்?
7. முதலாவது உலக சமயங்களின் பாராளுமன்றம் எவ்வருடம் நடைபெற்றது?
8. ஆசிய ஜோதியின் ஆசிரியர் யார்?
9. இலங்கையின் மத்திய வங்கி எந்நாட்டு சிவில் பொறியியலாளர் பொருத்தக்காரர்களால் கட்டப்பட்டது?
10. கோப்பனிக்கஸ் [Corpernicus] எந்நாட்டவர்?
11. விமானவிபத்தில் இறந்த இந்திய அணுசக்தி கமிஷன் தலைவர் யார்?
12. எலிசபெத் டெய்லர் [Elizabeth Taylor] என்பவர் யார்?
13. ஐக்கியராச்சியத்தில் [U. K] இலங்கை ஸ்தானிகராக கடமை ஆற்றுபவர் யார்?
14. ஐக்கிய அமெரிக்க [U. S] பாதுகாப்பு காரியதரிசி யார்?
15. பி. ஓ. ஏ. சி. [B. O. A. C.] தலைவர் யார்?

(விடைகள்: 3-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இத்தாலி பூகம்பத்தில் இறந்தவர் தொகை 600

## மேற்கு சிசிலியில் 800 வீடுகள் தரைமட்டம்

ரோம், ஜன. 16

இத்தாலியில்சிசிலியில் இரண்டுதினங்களுக்குமுன் ஏற்பட்ட பூகம்பத்தில் மாண்டவர் தொகை அறுநூற்றுக்கும் அதிகமாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

மேற்கு சிசிலியில் ஒரு பட்டினத்திலிருந்த 800 வீடுகள் அத்தனையும் இடிந்து விழுந்து தரைமட்டமாகி விட்டன.

அரசாங்கம் விடுத்த உத்தியோக பூர்வமான ஓர் அறிக்கையில்பூகம்பத்தினுல் சிசிலியில் மாண்டவர் தொகை 600 எனத் தெரிவித்துள்ளது. ஆனுல் இன்னும் மீட்பு வேலை நடைபெற்றுக் கொண்டிருப்பதால் மாண்டவர்தொகை இன்னும்அதிகமாக இருக்கலாம்எனக் கருதப்படுகிறது.

மீட்பு வேலைகள் தொடர்ந்துநடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

பிரிட்டனில் பனிக்கும் வெள்ளத்துக்கும் 21 பேர் பலியாகியிருக்கின்றனர்.

## லாவோசில் அரசாங்க துருப்புகள் வாபஸ்

### வாஷிங்டனில் பெண்கள் ஊர்வலம்

லண்டன், ஜன. 16

லாவோசில் திடீரென நிலைமை மோசமடைந்திருக்கிறது. மன்னர்தலைநகரான லுவாங்பிரபாங்கிற்கு சில மைல் தூரத்தில் இடதுசாரி பதட் லாவோ படைகள் திடீரென முற்றுகையிட்டுத் தாக்குதல் நடத்தியதால் அரசாங்கப்படைகள் அங்கிருந்து வாபஸ்பெறத் தொடங்கியிருக்கின்றன.

இதேசமயம் இரண்டு வடக்கு வியட்னும் குண்டுவீச்சு விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

தேவையற்ற வியட்னும் போரை எதிர்த்து வாஷிங்டனில் நேற்று 30,000பெண்கள் துக்க ஊர்வலம் நடத்தினர். கறுப்புடையணிந்து இப்பெண்கள் அமெரிக்க காங்கிரஸ் கட்டிடத்துக்கு ஊர்வலமாகச் சென்று மகஜர்ஒன்றைச் சமர்ப்பித்தனர். 18 முதல் 80வயது வரையான பெண்கள் இவ்வூர்வலத்தில் கலந்துகொண்டனர்

## "நாட்டின் மதிப்பு மக்கள் பண்பில் இருக்கிறது"

உடுப்பிட்டி, செவ்வாய்

"நாட்டுமக்கள் ஒவ்வொருவரிடையேயும் சுயமரியாதையும், தன்னம்பிக்கையும் ஏற்பட்டாலே நாட்டுக்கு வல்லமை உண்டாகும். சுபீட்சம் கிடைக்கும். எமது இளைஞர்கள் வீண்சச்சரவுகளில் ஈடுபடுவதை விடுத்து மரியாதை யுள்ளவர்களாகவும், மனிதாபிமான முள்ளவர்களாகவும் விளங்கினுல் நாம்எவருக்கும் தலைகுனிந்து வாழவேண்டியதில்லை. ஒரு நாட்டின் வளத்தையும், மக்களின் பண்பையும் கொண்டே பிறநாட்டினர் அந்நாட்டை மதிப்பர். ஆதலால் நாம் உயர்ந்த இலட்சியங்களையும்கடைப்பிடித்து வாழவேண்டும்." என்று சாவகச்சேரி எம். பி திரு. வி. என். நவரத்தினம் அல்வாய் மனேகரா விளையாட்டுக்கழகத்தின் நான்காவது ஆண்டு விழாவில் பேசுகையில் கூறினுர்.

வடமாகாணம் விளையாட்டுத்துறையில் அதிகமுன்னேற்றம் பெற்றுள்ளது இப்பகுதி இளைஞர்களின் சுபீட்சவாழ்விற்கு விளையாட்டுக்களே வழிகாட்டின. பல்கலைக் கழகங்களில் பயிலும் இளைஞர்கள் தமது கிராமத்தின் மதிப்பை உயர்த்த முன்வரல் வேண்டுமென்றும் அவர் கூறினுர்

திரு இராஜலிங்கம் பேசுகையில் மனித உணர்ச்சி தீவிரமானது உணர்ச்சிகளுக்கு ஒருபோதும் அடிமையாகக் கூடாது. சிந்தித்துச் செயலாற்ற வேண்டும் என்றுகூறினுர்.

விழாவிற்கு திரு. வே. க. தணிகாசலம் தலைமை வகித்தார் ஆசிரியர் திரு. நடராசா உட்பட வேறு சிலரும் பேசினர். திரு. இ. இரத்தினராசா நன்றியுரை கூறினர்.

## ஸ்பெயின் ஆட்சேபம்

ஜிப்ரால்ட்டர், ஜன. 16

தனது வானப்பிராந்திய எல்லை உரிமையை பிரிட்டிஷ் விமானங்கள் இரண்டு தடவை மீறிவிட்டதாகப் பிரிட்டனிடம் ஸ்பெயின் ஆட்சேபம் தெரிவித்திருக்கிறது.

## யாழ். நகரில் சுதந்திரதின கொண்டாட்டம்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணத்திலும் சுதந்திரதினத்தை கொண்டாடுவதெனத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது இத் தீர்மானம் யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா தலைமையில் நடந்த மகாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது. இம் மாநாட்டில் உதவி அரசாங்க அதிபர் உட்பட கடற்படைத்தலைவர், தரைப்படைத் தலைவர், பொலிஸ் அதிபர், சாரணர் பகுதித்தலைவர், கல்வி அதிகாரி, காரியாதிகாரி ஆகியோரும் இன்னும்பலரும் முகம் கொடுத்திருந்தனர்.

காலை 7 மணிக்கு யாழ். முற்றவெளியில் நடக்கும் அணிவகுப்பில் பட்டாளம், கடற்படை, பொலிஸ் கடேட்ஸ், சாரணர், பெண்கள் சாரணப்பகுதி ஆகிய கோஷ்டியினர் பங்கு பற்றுவர் அரசாங்க அதிபர் திரு வேர்ணன் அபயசேகரா அணிவகுப்பின் மரியாதையைப் பெறுவார். பிற்பகல் யாழ் திறந்தவெளி அரங்கில் பல கலை நிகழ்ச்சிகள் நடைபெறும்

## இரவல் தலை நாய்க்குட்டி

மாஸ்கோ, ஜன. 16

ஒரு நாய்க்குட்டியின் தலையையும் பாதங்களையும் எடுத்து மற்றொரு நாய்க்குட்டிக்கு பொருத்தும் சத்திரசிகிச்சை சமீபத்தில்நடந்துள்ளது.

மாஸ்கோ டாக்டர் டெமிகோவும் அவரது சகாக்களும் இதைச்செய்தனராம்.

பிறந்த இரு மாதமுள்ள ஒரு நாய்க்குட்டியின் தலையையும் கால்கள் பாதங்களையும் அவர்கள் தனியாக எடுத்துஇன்னுரு நாய்க்குட்டிக்குப் பொருத்தினுர்கள். இந்த சத்திரசிகிச்சைநான்கு மணிநேரம் நடந்தது.

## மாக்மில்லன்—ஜோன்சன் சந்திப்பு

வாஷிங்டன், ஜன 16

பிரிட்டனின் முன்னுள் பிரதமர் திரு. மக்மில்லன் நேற்று அமெரிக்க அதிபர் திரு ஜோன்சனைச் சந்தித்துப்பேசினுர்,

தனது "உலகநினைவுகள்" என்ற நூலை வெளியிடுவது சம்பந்தமாக அமெரிக்காவுக்கு விஜயம் செய்திருக்கும் திரு மாக்மில்லன் அதிபர்ஜோன்சனுடன் தாம் பேசியதுபற்றி எதுவும் வெளியிடவில்லை.

## ஈராக்கில் 6 மந்திரிகள் ராஜினுமா

பாக்தாத், ஜன. 16

ஈராக்மந்திரிசபையிலிருந்து ஆறு மந்திரிகள் ராஜினுமாச் செய்திருக்கின்றனர். விரைவில் பொதுத்தேர்தல் நடைபெற ஒழுங்கு செய்வதாக அரசாங்கம் அளித்திருந்த வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லைஎன்பதை ஆட்சேபித்தே இவர்கள் ராஜினுமாச் செய்திருக்கின்றனராம்.

## மாணவர்கள் கைது

டோக்கியோ, ஜன. 16

அணு ஆயுதம் பொருத்தப்பட்ட அமெரிக்க விமானந்தாங்கிக் கப்பல் ஒன்று ஜப்பானுக்கு விஜயம் செய்வதைஎதிர்த்து டோக்கியோவில் மாணவர் ஆர்ப்பாட்டம் செய்தனர். பொலிசார் 140 மாணவர்களைக் கைது செய்தனர்.

## "இசைவரலாற்றில் புதிய திருப்பம்"

அளவெட்டி, செவ்.

ஈழத்தின் தலைசிறந்த நாகசுரவித்துவான்களான என். கே. பத்மநாதனும், எ. பாலகிருஷ்ணனும் ஈழத்தின் கலைத்திறனை தமிழகம் சென்று தலைசிறந்த இசை விழாக்களில் பங்கு கொண்டு ஈழத்தின் கலைத்திறனை நாடறியச் செய்தது ஈழத்தின் இசை வரலாற்றில் ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்தியுள்ளது" என்று வழக்கறிஞர் ஆர். என் சிவப்பிரகாசம் பலாலி விமான நிலயத்தில் பத்மநாதனுக்கும், பாலகிருஷ்ணனுக்கும் அளிக்கப்பட்ட வரவேற்பு வைபவத்தில் பேசும் போது கூறினுர்.

கடந்த சில தினங்களாக தமிழக இசை விழாக்களில் இவர்கள் கலந்து கொண்டபின் தாயகம் வந்து சேர்ந்தனர். பலாலி விமான நிலையத்தில் இவர்களுக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது.

## 'திருவாசகதேனைப்பருகியதால் போப் தமிழறிஞரானுர்'

சுழிபுரம், செவ்

"ஆங்கில அறிஞர் போப் மணிவாசகரின் திருவாசகத் தேனைப் பருகியதால் தான் ஒரு தமிழறிஞராக வேண்டும் என விரும்பினுர். பிறமொழி பேசும் அறிஞர்கள் திருவாசகத்தேனைப பருகி ஆனந்திக்கும்போது நாம் பருகாது இருக்கலாமா? தேன்கலந்து பருகுவதால் நோய் குணமடைகின்றது திருவாசகத்தேனைப் பருகுவதால் எமது பிறவிப் பெரும் பிணிநோய் தீர்க்கப்படுகின்றது" என்று சித்தன்கேணி ஸ்ரீ சிவசிதம்பரேஸ்வரர் ஆலய மண்டபத்தில் நடைபெற்ற மணிவாசகர் விழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய திரு. கு. சிவசுப்பிரமணியம் குறிப்பிட்டார். இவ்விழாவுக்கு பண்டிதர் த. சுப்பிரமணியம் தலைமை வகித்தார். திரு. மு. வன்னியசிங்கம், செல்வி நி. நிமலநாயகி, திரு. மு, பத்மநாதன் ஆகியோரும் உரையாற்றினர்.

## யாழ். தொழில் நுட்பக்கல்லூரியில் நடந்த 'குட்டி'தேர்தல்

உடுவில், செவ்வாய்

யாழ்ப்பாணம் கனிஷ்ட தொழில்நுட்ப நிலைய மாணவர் மன்ற உத்தியோகத்தர்களை தெரிவு செய்வதில் இவ்வருடம் பாராளுமன்றத் தெரிவுமுறை கைக்கொள்ளப்பட்டது.

வழக்கமாக இம்மாணவர் மன்றதெரிவு நேரடி பகிரங்க வாக்கெடுப்பு முறை மூலம் நடத்தப்பட்டு வந்தது. ஆனுல் இவ்வருடம் இம்முறை மாற்றிவமைக்கப்பட்டு பாரளுமன்ற தெரிவு முறைபோல் இரகசிய வாக்கெடுப்பு முறைமூலம் உத்தியோகத்தர்கள் தெரிவுசெய்யப்பட்டனர்.

போட்டியிடும் அபேட்சகர்கள் கட்டுப்பணம் கட்டியே தேர்தலுக்கு நிற்க வேண்டும் என்றமுறை கைக்கொள்ளப்பட்டது. மாணவர் மன்றத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் சுமார் 25 பேர்வரை போட்டியிட்டனர்.

பகல்முழுவதும் நடைபெற்ற இத்தேர்தல் மாலை மூன்றுமணியுடன் முடிவடைந்து வாக்குகள் எண்ணப்பட்டன. பாடசாலை போதகுசிரியர்கள், எழுதுவினைஞர்கள் வக்குகளை எண்ணி கணக்கிடுவதில் ஈடுபட்டிருந்தனர்.

கட்டட அமைப்பு போதனையின் மாணவர் திரு. கு. நந்தலால் நேரு, 31 மேலதிக வாக்குகளால் தன்னுடன் தலைவர் பதவிக்குப் போட்டியிட்ட திரு. வி திருச்செல்வேலை தோற்கடித்தார்.

தேர்தல் முடிவில் வெற்றி பெற்றோர் விபரம் வருமாறு:-

தலைவர் திரு. கு. நந்தலால்நேரு, செயலாளர் திரு க. துரைசிங்கம், உபதலைவர் திரு. அ இலட்சியபூபதி உப செயலாளர் திரு. வே. ஈஸ்வரன், தமிழ் பத்திராதிபர் திரு சி. சுந்தரலிங்கம் ஆங்கில கூட்டத்தலைவர் திரு. க. பாலேந்திரன், ஆங்கில கூட்ட செயலாளர் திரு ஆ. ஆனந்தராசா, விளையாட்டுப்பகுதிக் காரியதரிசி திரு ச. குகேந்திரன், ஆங்கிலப் பத்திராதிபர் திரு. ச. குருநாதன், பொருளாளர் திரு. க. சிவஞானம்.

## வெளிநாட்டு சேலை வைத்திருந்ததாக கைது

வல்வெட்டித்துறை. செவ்.

வல்வெட்டித்துறை பொலிசாருக்கு கிடைத்த இரகசியத் தகவலைத் தொடர்ந்து இன்ஸ்பெக்டர் திரு. விஜயதிலகா, சார்ஜண்ட் ஜயசிங்கா ஆகியோர் தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டியொன்று வல்வெட்டித்துறையில் ஒரு வீட்டை சோதனையிட்ட போது உயர்ந்த ரகத்தைச் சேர்ந்த 36 இந்தியன் மணிபுரி, காஞ்சிபுரம், காஷ்மீர் சேலைகள் இருக்கக் கண்டு பிடிக்கப்பட்டது.

இது சம்பந்தமாக ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர். பறிமுதல் செய்யப்பட்ட பொருட்கள் சுங்க இலாகாவிடம் ஒப்படைக்கப்பட்டு விசாரணை நடைபெறுகிறது.

## பொது அறிவும் உள்ளூர் அறிவும்

விடைகள்

1. டாக்டர் ஹென்றிச் வியூபெக் [Dr. Henrich-Luebke].
2. திரு. வி. வி. கிரி [V.V. Giri].
3. திரு ஹியூபேட் ஏ டி சில்வா [Hubert A de Silva]
4. ஆறுமுகநாவலர்
5. கொழும்பு ஜேனல் [Colombo Journal].
6. சேர். ஹென்றி பொங்மேசன் மூர்.
7. 1893.
8. எட்வின் ஆனல்ட் [Edwin Arnold].
9. "சுபிலின்" சிவில் பொறியியல் பொருத்தக்காரர்கள், மேற்கு ஜேர்மனி [Edzublin Ag Civil Engineering Contaractors, W. Germany]
10. போலந்து [Polish] தேசத்தவர்.
11. டாக்டர் எச் ஜே பாபா [Dr H. J. Bhabha]
12. புகழ்பெற்ற ஹொலிவுட் நடிகை.
13. சேர் லலிதா ராஜபக்சா.
14. திரு. ரொபெட் எஸ். மெக்னமாரு [Robert S. Mcnamara].
15. சேர். சார்ல்ஸ் குத்றி [Sir Charles Guthrie]

[அடுத்த மாதிரி வினுவிடைகள் 20 1-68-ல் வெளிவரும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

சங்கள் நயத்தின் பொருட்டு மாத்திரம் அன்றி பிறர் நயத்தின் பொருட்டும் பிரயா படுகின்றவர்களே உத்தமர்.

—நாவலர்பெருமான்


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box: 49 Jaffna
Telephone: 389

யாழ்ப்பாணம் பிலவங்க௵ தை மீ 3 உ (17-1-68


## தொழில் தகராறு

கிழக்கிலங்கை காகிதத் தொழிற்சாலையைச் சேர்ந்த தொழிலாளர் சம்பந்தமாக நீண்டகாலமாக இருந்துவந்த பல பிரச்னைகள் ஆலைநிர்வாகிகளுக்கும் தொழிலாளர் பிரதிநிதிகளுக்குமிடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் காரணமாக தீர்க்கப்பட்டுவிட்டதாக ஒரு செய்தி கூறுகிறது தொழிலாளர் பிரச்னைகளுக்கு பேச்சுவார்த்தைகள்மூலம் சுமுகமான தீர்வு காண முடியும் என்ற நம்பிக்கையை இது வலியுறுத்துகிறது.

தொழிலாளர் பிரச்னைகளுக்குத் தீர்வு காண்பதற்கு ஒரே வழி வேலைநிறுத்தம்தான் என்ற தவறான ஓர் அபிப்பிராயம். தொழிலாளர் மத்தியில் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது வேலைநிறுத்தங்களை வேறு பல காரணங்களுக்கு உபயோகிக்கும் சிலர், இந்த அபிப்பிராயத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்று கருதுவதில் தவறிருக்க முடியாது வேலைநிறுத்தம் கூடவே கூடாது என்பது நமது கருத்தல்ல வேலைநிறுத்தம் தொழிலாளருக்குள்ள உரிமைகளில் ஒன்று. ஆனால் தொழிலாளர் தமது உரிமைகளைச் சரிவர உணர்ந்து நடந்துகொள்ள வேண்டும் என்பதே நமது விருப்பம். வேலைநிறுத்தம் கூர்மையான ஆயுதம். இனி வேறு வழியில்லை என்ற நிலையிலேயே இந்த ஆயுதத்தை தொழிலாளர் உபயோகிக்க வேண்டும். வேலைநிறுத்தம், மற்ற எவரையும்விடத் தொழிலாளரையே பெரிதும் பாதிக்கும் என்பதுதொழிலாளருக்குத் தெரியாததல்ல. ஆயினும் தங்கள் குறைகளை நிவர்த்தி செய்து கொள்ள முடியுமென்ற நம்பிக்கையில்தான் அவர்கள் வேலைநிறுத்தம் ஆரம்பிக்கின்றனர். என்றாலும் இங்கு வேலைநிறுத்தங்கள் அடிக்கடி நடைபெற்று வந்திருப்பதாலும் தொழிலாளரின் குறைகளை நிவர்த்தி செய்வதற்கு மட்டுமல்லாது வேறு பல காரணங்களுக்கும் உபயோகிக்கப்பட்டு வந்திருப்பதாலும் என்னதான் நியாயமான கோரிக்கைகளுக்காக தொழிலாளர் வேலைநிறுத்தம் செய்தாலும் பொதுமக்களின் ஆதரவு அதிக அளவில் கிடைக்க முடியாதிருக்கிறது. விலைவாசி உயர்வு, வாழ்க்கைச் செலவுக்கஷ்டம், வேலையில்லாத்திண்டாட்டப் பிரச்னை ஆகியவைகளும் வேலைநிறுத்தங்கள்மீது பொதுமக்களுக்குச் சலிப்பும் ஏற்படக் காரணமாகும். பொதுமக்களின் ஆதரவு பெறும் வேலை நிறுத்தங்கள் வெற்றிபெறுவதும் சுலபமல்ல. நாட்டின் நிலைமையையும் கருத்தில் கொண்டே தொழிலாளர், வேலைநிறுத்தம் என்னும் ஆயுதத்தை உபயோகிக்க முன்வர வேண்டும்.

தனியார்துறை ஊழியர் சிலரும், தோட்டப் பகுதித் தொழிலாளர் சிலரும் சென்ற பல தினங்களாக நடத்திவந்த வேலைநிறுத்தத்தினால் நாட்டின் வருமானம் பெருமளவு பாதிக்கப்பட்டிருக்கிறது. வாழ்க்கைச் செலவு உயர்வைக் கருதி தங்களின் சம்பளத்தையும் உயர்த்த வேண்டுமென்ற கோரிக்கையை வைத்தே இவர்கள் வேலைநிறுத்தம் செய்துவந்தனர். நாட்டின் பொருளாதார நிலை மோசமாக இருக்கும்போது வேலைநிறுத்தம் செய்வது நிலைமையை மேலும் மோசமாக்குமே தவிர சீராக்க மாட்டாது. நாட்டின் பொருளாதார நிலைமை மோசமாக இருக்கும் இச்சமயத்தில், முதலாளிமாரும் அரசாங்க அமைச்சர்கள், அதிகாரிகளும் தாங்களும் சிக்கனமாக நடந்து கொண்டால்தான் தொழிலாளரும் நிலைமையை உணர்ந்து நடந்து கொள்ள முடியும். தொழிலாளருக்கும் குறைகள் இருக்கின்றன என்பதையும் அவற்றில் நியாயமிருக்கிறதென்பதையும் உணர்ந்து கொள்ள வேண்டியதும் அவசியம்.

தனியார்துறை ஊழியரின் வேலைநிறுத்தத்தில் 24 தினங்களின் பின் தொழில் அமைச்சர் நடவடிக்கை எடுத்து இப்பிரச்னையைக் கட்டாய மத்தியஸ்தத்துக்கு விட உத்தரவிட்டிருக்கிறார்.

தொழில் தகராறு நீதிமன்றம் அளிக்கும் தீர்ப்பை இருதரப்பினரும் ஏற்க வேண்டும். கிழக்கிலங்கை காகித ஆலை நிர்வாகமும், தொழிலாளரும் தங்கள் பிரச்னைகளைப் பேச்சுவார்த்தை மூலம் தீர்த்து வழிகாட்டியிருக்கின்றனர். இதே முறையை இதர ஸ்தாபனங்களும் தனியார்துறையினரும் பின்பற்றிப் பிரச்னைகளுக்குச் சுமுகமாகத் தீர்வு காண முன்வந்தால் நாட்டில் தொழில் தகராறுகள் நீங்கி, முதலாளி, தொழிலாளி உறவு சீராகி, உற்பத்தியும் பெருகும்; பொருளாதாரக் கஷ்டமும் நீங்கும்.

## வவனியாவில்..

வவனியா, ஞாயிறு

வவனியாக் கச்சேரியில் வவனியா அரசாங்க அதிபர் திரு பி.ஸி. பெரேரா தலைமையின் கீழ் நடைபெற்ற சுதந்திரதினம் பற்றிய மகாநாட்டில் வவனியாயில் அத்தினத்தைக் கொண்டாடுவதற்கேற்ற ஒழுங்கு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டன. சுதந்திரதினத்தன்று சகல பல்வேறு நிகழ்ச்சிகளும், மாலையில் பொதுக்கூட்டமும் நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

## "உருகிநிற்பவருக்கே இறைவன் அருள் கிட்டும்"

### சிங்காரவேலனர் விளக்கம்

யாழ்ப்பாணம், செவ்.

தட்டுங்கள் திறக்கப்படும் என்றயேசுவின் வாக்குண்டு. கிறிஸ்தவ சமயத்து மணிமொழியானாலும் அதில் உண்மையுண்டு. இறைவனை நோக்கி உருகி நிற்கின்ற உள்ளமுடையவருக்கே இறைவன் இன்னருள்செய்து ஈடேற்றம் காட்டுகிறான். அப்படியாகிய சிவனை நோக்கி சதா நைந்துருகி நின்ற மணிவாசகர் அவன்றாளில் ஐக்கியமானதையே அவரது கண்ட பத்து என்ற பாடல்கள் காட்டுகின்றன."

இவ்வாறு காரைநகர்ச் சிவன்கோவில் மணிவாசகர் விழாவின் இறுதி நாளில் உரையாற்றிய தமிழக அறிஞர் சொ. சிங்காரவேலன் தெரிவித்தார்,

அவர் மேலும் கூறியதாவது:-

இறைவனின் அருள்வெள்ளத்தை நம்மால் கடக்கமுடியாது. அவனது ஆட்டம் நம்மால் கண்கொடுத்தே காணமுடியாத பெருமையுடையது. அத்தனை வலிமை வாய்ந்தது. ஆற்றிலுள்ள வெள்ளம் முழுவதையும் அப்படியேவயலுக்குப்பாய்ச்சிவிடுவோமானால் வயலே அழிவுறும். ஆற்றை மதகு வைத்து நிறுத்தி சிறிய துவாரத்தினூடாக வெள்ளத்தை வெளியே ஒழுங்கான வாய்க்கால்மூலம் அளவோடு பாய்ச்சினுற்றான் பயிர் பயன் தரக்கூடிய முறையில் வளர்ச்சி பெறும்.

இறைவனது அருள்வெள்ளத்தில் ஆன்மாக்கள் அள்ளுண்டுபோகாமல் தடுத்து அருள்பாலிக்க அம்மையின் அருள்வேண்டும் அம்மையே அருள்வழங்கும்போது இறைவனுடன் இருந்தருளுகிறாள்.

ஞானசம்பந்தப் பெருமானுக்குஞானபோனகர் என்ற காரணப்பெயருண்டு இறைவனது அருள்பாலை மாந்தியவர் அவர். சிவஞானம் உயர்ஞானம், கலைஞானம், மெய்ஞானம் ஆகிய ஞானங்களை ஒன்றாக அம்மை கிண்ணத்திலூற்றி சம்பந்தப்பெருமானை ஆட்படுத்தினாள்.

உலகத்தில் இறைவனது அருளை அடைவதற்கு ஞானிகளுக்கு குரு ஒருவர் அம்மையின் வடிவாக விளங்குகிறார். குரு உபதேசங்கொண்டே அடியார்கள் இறைவனை அடைந்தனர். இறைவன் ஒருவனுக்கே உள்ள அம்மை அவன் அப்பனும் அவனது வித்தகவிளையாட்டுக்கு எல்லையே கிடையாது.

இந்த இறைவனின் இன்னருளை நீலச்சிகண்டியில் ஏறும் பிரான் எந்த நேரத்திலும் வழுவான் என்று அருணகிரிநாதர் சொல்லுகிறார்.

இறைவனுடன் இணைகின்ற உயிர்களுக்கு இறைவன் பேரருளைக்காட்டும் பண்பை உணர்த்துகின்ற மணிவாசகர்ஒன்றியருள் நினைமின்கள் காலனைக் காலால் உதைத்தவன் என்று வந்தாய் என்றுகேட்டு அருளுவான் என்கிறார்.

வாழ்க்கையில் தமது காலத்தை அவமாக்கிவிடுகிறோம் நாம். எமது பொழுதுகள் தவமாகக் கழியுமானால் இறைவனது பாதாரவிந்தங்கள் எம்மைப் பக்குவமாகக் கரைசேர்க்கும். [நி]

## இன்றைய பலன்

[17-1-68]

புதன்கிழமை

தை மீ 3 உ

நட்சத்திரம்- ஆயிலியம் பி. இரவு 3-07 மேல் மகம்.

திதி- துதியை இரவு 10-06 மேல் திருதியை.

சுபநேரம்- 5-04 - 6-34

ராகுகாலம்- 12-34- 2-04

இன்று பிறந்தவர்களுக்கு:- இவ்வாண்டு நீர்த்தொழில் விருத்திக்கு இடமுண்டு. தாயின் உடல்நிலை கவலையைத் தரலாம். பரந்த நோக்கும் பொதுப்பணி நாட்டமுமுண்டு. வரவு திருப்தியளிக்கினும் செலவும் அதிகமாக இருக்கும். சுபநிகழ்ச்சிக்கும் இடமுண்டு.

மேஷம்- திருப்தி மனப்பான்மை, திறமைக்கு மதிப்பு.

ரிஷபம் - வரவில் திருப்தி, வாழ்த்துமுண்டு.

மிதுனம் - தனிய நஷ்டம், தனி வழி நாட்டம்.

கடகம்- முகமன் கூறுவோர் கண்டு மோனத்தில் மூழ்கிவிடு.

சிம்மம் - தேன் சிந்தும் பேச்சு, தேடியது கிடைக்கும்.

கன்னி - ஏக்கத்தின் சாயல், ஏமாற்றமுண்டு.

துலாம் - திடீர் வரவு, திகைக்க வைக்கும் உறவு.

விருச்சிகம் - பனிமலர்ப் பார்வை, பிரிவின் உதயம்.

தனுசு - வேவுக்கணை தொடுப்பர், விழிப்புடன் இரு.

மகரம் - தாம்பத்தியம் சிறக்கும், தனமும் சேரும்.

கும்பம் - முடையும் தடையும் இணைந்து வரும், பின்தங்க நேரிடும்.

மீனம் - பொதுநலம் பேணுதல், புண்ணிய விருப்பு.

— சோதிடக்கலாநிதி —

இருமலை வேலுப்பிள்ளை

## பாகுபாட்டை நீக்க உறுதி

யாழ்ப்பாணம், புதன்

ஆனைக்கோட்டை மக்களுக்கென இருக்கும் இடுக்காட்டுக் கிணற்றில் உரிமை குறைந்த மக்கள் எனக் கருதப்படுபவர்கள் தண்ணீர் அள்ள மறுக்கப்பட்டு வருகிறார்கள். இந்நிலையை நீக்கி எல்லோரும் பாவிக்கக்கூடிய முறையில் அக்கிணற்றை அமைத்துத் தரும்படி அரசாங்க அதிபரையும், கிராமசபைத் தலைவரையும் நேற்று ஆனைக்கோட்டையில் நடைபெற்ற திருவள்ளுவர் சேவா சனசமூகநிலையத் திறப்புவிழாவில் திருவள்ளுவர் மகாசபைத் தலைவர் திரு ஆசீர்வாதம் ஹென்றி கேட்டுக்கொண்டார்.

இதன்பின் பேசிய ஆனைக்கோட்டை கிராமசபைத் தலைவர் திரு. சி. மார்க்கண்டு, இக்குறையை வெகு விரைவில் தீர்த்து வைப்பதாக உறுதி கூறினார்.

ஆனைக்கோட்டைப்பகுதி கிராமசேவகர் பேசுகையில், அரசாங்க ஊழியருக்கும் மக்களுக்குமிடையே சில அரசியல்வாதிகள் பகையை உண்டுபண்ணுவதற்கு முயற்சிக்கிறார்களென்றும் இவர்களின் முயற்சிக்கு இடமளிக்கக்கூடாதென்றும் கேட்டுக்கொண்டார். [ந. நி.]

# உப-உணவுப்பெ
# வடபகுதியிலிரு

## பொங்கல்விழா

நல்லூர், செவ்வாய்

நல்லூர் வடக்கு இலங்கை நாயகி சனசமூகநிலையத்தில் தைப்பொங்கல் விழாவையொட்டி விநோத உடைப்போட்டியும அழகுராணிப் போட்டியும் நடைபெற்றன.

இப்போட்டியில் விருந்தினர்களாக அரசாங்க அதிபரும் பாரியாரும் கலந்துகொண்டனர்.

விநோத உடைப் போட்டியில் பரிசு பெற்றோர்களின் விபரங்கள்:- பொ. நடராசா வேடன், வி. கனகலிங்கம் - பால் இல்லாக் குழந்தை, கேகயலிங்கம் - காவடி, சி. மருதலிங்கம் -இயமன், பா. பாலச்சந்திரன் - தொழிலாளி.

அழகுராணிப் போட்டியில் பரிசுபெற்றோர் விபரம்:-

திருமதி கமலா கேகயலிங்கம், செல்வி பாலசவுந்தரி தர்மலிங்கம், செல்வி கமலாதேவி சிவக்கொழுந்து.

## துப்பாக்கி சூட்டுக்குபலி

சங்கானை, செவ்வாய்

கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை சங்கானைச் சந்தையை நோக்கிச் சென்றுகொண்டிருக்கையில் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி அபாயகரமான நிலையில் யாழ். அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட திரு. வி. செல்லமுத்து நேற்றுக்காலை மரணமடைந்தார்.

டாக்டர் சுப்பிரமணியம் பிரேதபரிசோதனை நடத்தினார் விசாரணை நடாத்திய மல்லாகம் நீதிபதி திரு. சண்முகலிங்கம் சாட்சிகளைப் பதிவுசெய்து கொலையெனத் தீர்ப்பளித்தார்.

இதுசம்பந்தமாக சங்கானைப்பொலிசார் தவராசா அல்லது பொன்னுக்கிளி என்பவரைச் சந்தேகத்தின் மீது கைது செய்துள்ளனர். தொடர்ந்து விசாரணை நடைபெற்றுவருவதுடன் நிற்சாமப்பகுதியில் பொலிஸ் பந்தோபஸ்து பலப்படுத்தப் பட்டுள்ளது.

## சிறுபான்

[1-ம் பக்க தொடர்ச்சி
திரு. அமிர்தலிங்கம்மே
பேசும்போது மாவட்டச
சபோதா வருமேயா
பெரும் ஆபத்து வரு
சிலர் பொய்ப்பிரசா
செய்துவருகின்றார்கள்
றும், ஆனால் மாவட்டச
யினால் பெரும் நன்மை
ஏற்படும் என்றும் கூறி
அரசாங்க அதிபர் தி
வேர்ணன்அபயசேகரா
யத்தைத் திறந்துவைத்
பேசுகையில் கூறியதாவ
"இந்த நாட்டில் வா
மக்களின் பொருளாதா
அரசாங்கத்தின் கையிலே
தங்கியுள்ளது. ஆகை
னால் அரசாங்கம் பல்வே
திட்டங்களை அமைத்து
ற்குள் தலைசிறந்து விளங்
விவசாயத்தை விருத்
செய்துவருகிறது. இ
வா அரசாங்கம் விவ
யத்துறையில் செய்துவ
மாற்றங்களாலும் திட்
களாலும் இந்நாட்டுக்
பெரும் பொருளாதா
நிலையை உண்டுபண்ணும்
அவர் மேலும்பேசுகை
கூறியதாவது:- அரசாங்
இந்நாட்டில் கைத்தொ
களைப் பொருக்குவத
பெரிதும் ஊக்கமெடு
வருகிறது. இத் திட்டத்
கீழ் 1000 கைத்தறி நிலை
களை நிறுவி கைத்தொ
பெருக்கத்தினால் அந்
நாடுகளுக்கு விரயம்
யும் பணத்தை மீதப்ப
தலாம். நாட்டின்பொரு
தாரத்தைப் பெருக்கு
ற்கு தனிநபர்களும்
திட்டத்தினால் அதி
உணவை உற்பத்தி செய்
னாலும் ஏற்படும் பிறந
டுச் செலாவணி மிச்சத்
பிறதேவைகளுக்கு செ
செய்யலாம். இத
கொண்டு உயர்தர ஆஸ்
திரி, கல்லூரி போன்றப
தரும் நிலையங்களை உரு
க்கலாம். நம் வாழ்
தரம் உயரவேண்டுமா
அதிகபணம் செலவிடவே
டும்.
அரசாங்கம் உத்தரவ
விலைத்திட்டத்தின் கீழ் நி
யமான விலையைக்கெ

## 275 கிராம சேவகர்களுக்கு விசேஷ பயிற்சியளிக்கப்படு

யாழ்ப்பாணம், செவ்.

வடமாகாணத்தைச் சேர்ந்த சுமார் 275 கிராமசேவகர்களுக்கு முன்னேற்றமடையாத கிராமங்களின் அபிவிருத்திக்கான பயிற்சிகளையும் போதனைகளையும் அளிப்பதற்கு கிராம முன்னேற்றப்பகுதியினர் துரித நடவடிக்கையில் இறங்கியுள்ளனர்

கிராம முன்னேற்றப் பகுதியின் இவ்வாண்டுக்கான இப்புதியதிட்டத்தின் கீழ் வவனியா, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய முக்கிய இடங்களில் உள்ள கிராமசேவகர்களுக்குகிராம அபிவிருத்தியின் நோக்கமாக பெபிரவரி 7-திகதியில் இருந்து ஜூலைமாதம் வரை அச்சுவேலி கிராம முன்னேற்ற மண்டபத்தில் பயிர்ச்சியளிக்கப்படவிருக்கிறது.

யாழ்ப்பாணத்தில் சுமார் 158 கிராமசேவகர்களும் மன்னாரில் சுமார் 31 கிராம சேவகர்களும் வவனியா மற்றும் இதர இடங்களிலிருந்து சுமார் 86 கிராம
சேவகர்களும் பயி
யில் ஈடுபடுத்தப்பட வி
கிறார்கள்.
முன்னேற்றமடையா
கிராமங்களை முன்னேற்
தற்கு முக்கிய அரசாங்
பிரதிநிதியாகவுள்ளவர்
அவ்வப்பகுதிகளில் உ
கிராம சேவகர்களேெ
றும் அப்படிப்பட்டபெ
ப்பு வாய்ந்த கிராமசேவ
களுக்கு கிராமங்களில்
எந்தெந்தமுறையில் சே
யளிக்கலாம் என்பதைப்
றிய அறிவும், செய்
றைப்பயிற்சிகளும் அவ
ளுக்குக் கட்டாயம் இரு
பட வேண்டுமென்றுஇப்
ற்சிகளை அளிக்கவிருக்
கிராம முன்னேற்றப் ப
அதிகாரியானதிரு. எம் இ
மச்சந்திரன் தெரிவித்த
ஒவ்வொரு பயிற்சிவகு
லும் 25 கிராமசேவகர்
கலந்து கொள்வார்களெ
றும் ஒவ்வொரு வகுப
களுக்கும் தொடர்ந்து
முறைபயிற்சிகள் அளிக்
படுமென்றும் திரு. இரா
சந்திரன் தெரிவித்தார்
[வி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வருட..

# ...ப்பொருட்கள் உற்பத்தி அதிகரிப்பு:
# ...யிலிருந்து பழவகைகள் ஏற்றுமதி

## ...பான்மைத் தமிழர்...

...க தொடர்ச்சி)
...தலிங்கம்மேலும்
...து மாவட்டசபை
...வருமேயானல்
...பத்து வருமென
...பொய்ப்பிரசாரம்
...கின்றார்கள் என்
...ல் மாவட்டசபை
...நம் நன்மையே
...என்றும் கூறினர்.
... அதிபர் திரு.
...அபயசேகரா நிலை
...திறந்துவைத்துப்
... கூறியதாவது:-
...நாட்டில் வாழும்
...பொருளாதாரம்
...தின் கையிலேயே
...து. ஆகையி
...ங்கம் பல்வேறு
... அமைத்து அ
...சிறந்து விளங்கும்
...தை விருத்தி
...கிறது. இவ்
...ங்கம் விவசா
...ல் செய்துவரும்
...லும் திட்டங்
... இந்நாட்டுக்குப்
...பொருளாதார
...ண்டுபண்ணும்.''
...லும்பேசுகையில்
...து:- அரசாங்கம்
... கைத்தொழில்
...பெருக்குவதற்கு
... ஊக்கமெடுத்து
...இத் திட்டத்தின்
...கைத்தறி நிலையங்
... கைத்தொழிற்
...னல் அந்நிய
... விரயம் செய்
...தை மீதப்படுத்
...ட்டின் பொருளா
... பெருக்குவத
...பர்களும் இத்
...னல் அதிக
...ற்பத்தி செய்வத
...ற்படும் பிறநாட்
...அணி மிச்சத்தை
...களுக்கு செலவு
... இதனைக்
...உயர்தர ஆஸ்பத்
...ரி போன்றபயன்
...பங்களை உருவா
... நம் வாழ்க்கைத்
...ரவேண்டுமானல்
... செலவிடவேண்

...ம் உத்தரவாத
...த்தின் கீழ் நியா
...விலையைக்கொடு

த்துபொருட்களை உற்பத்தி செய்பவர்களிடமிருந்து வாங்கிவருகிறது. இதனல் நெல், உருளைக்கிழங்கு, மிளகாய் போன்ற பொருளாதாரத்துக்குத்துணையாகஇருக்கும் பொருட்களை மக்கள் ஊக்கத்துடன் செய்து வருகின்றனர் எனவும் அவர் கூறினர்.

இம்மன்றம் கலாச்சாரத்தை வளர்ப்பதற்கு உறுதுணையாக விளங்கவேண்டும். இந்நிலையத்தின்மூலம் ஆண்கள் ஒன்று சேர்ந்து படித்து மற்றவர்களுடன் அபிப்பிராயங்களை பரிமாறிக்கொள்வதனல் மக்களிடையே புத்துணர்ச்சி உண்டாகும். இதேபோன்று உங்களின் சமூகத்தவரல்லாதவர்களுடனும் பழக வாய்ப்பு ஏற்படுகிறது. இதனல் சமூக ஏற்றத்தாழ்வுக்கு வித்திட முடியும். சமூக ஏற்றத்தாழ்வுகளைக் களைவதற்கு சட்டம் முக்கியமாக இருக்கிறது. இருந்தபோதிலும் இச்சட்டத்தை அமுல் நடத்துவதில் பெரும் சங்கடங்களும் இருக்கின்றன. அத்துடன் கவனமாகவும் நடந்துகொள்ளவேண்டும். இதைப் பொறுத்தவரையில் இரண்டு பிரச்னைகள் உண்டு. தேநீர்க்கடை, சிகை அலங்கார நிலையங்கள், ஆலயங்களில் இப்பாகுபாடுகள் கூடாது. பாராளுமன்றச் சட்டத்தை மீறுவோர்கள் மீது நீதிமன்ற நடவடிக்கை எடுக்கவேண்டும். கடந்த 12 மாதங்களில் கூடுதலான ஆலயங்களை எல்லோருக்கும் திறந்துவைப்பதற்கு எல்லா அரசாங்க ஊழியர்களும், அனேகமான பாராளுமன்ற உறுப்பினர்களும் ஒத்துழைத்தார்கள்.

இப்பிரச்னையைத் தீர்ப்பதற்கு கல்வி இலாகாவினரே அதிக ஈடுபாடு கொண்டுள்ளனர். பிரசாரத்தின் மூலமும், ஐக்கியமான கல்வியின் மூலமும் பிரசனைக்குத் தீர்வு கண்டு கொண்டு வருகிறார்கள் என்றும் கூறினர்.

அவர் தொடர்ந்து கூறுகையில், ஒவ்வொரு கிராமச்சபை எல்லைக்குள்ளும் ஒவ்வொரு பொதுக் கிணறுகளை அமைத்துக் கொடுத்திருக்கிறேம். இதில் அனைவரும் பாவித்துக்கொள்ளமுடியும். இதேபோன்று காணிஅற்ற தாழ்த்தப்பட்ட மக்களுக்கு காணி வழங்குவதற்கு காணி இலாகா ஆரம்ப நடவடிக்கை எடுத்துள்ளது. ஒரு பாராளுமன்றஉறுப்பினர்களின் தொகுதிக்கு அரை லட்சம் ரூபா தாழ்த்தப்பட்ட மக்களுக்கென்று ஒதுக்கியுள்ளது. அதேபோன்று ஒவ்வொரு தொகுதியிலும் 1 லட்சம் ரூபா ஏழைகளுக்கென்றுஒதுக்கியுள்ளது. உங்களின் கஷ்டத்தை பொறுப்புணர்ச்சியுடன் முடித்து வைப்பது எமது கடமை. இதை நீங்கள் உணர்ந்து எம்முடன் தொடர்பு கொள்ளவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

## ...களுக்கு
## ...கப்படும்

...ம் பயிற்சி
...த்தப்பட விருக்

...ற மடையாத
... முன்னேற்றுவ
...கிய அரசாங்கப்
...க வுள்ளவர்கள்
...திகளில் உள்ள
...வகர்களேயென்
...டிப்பட்டபொறு
... கிராமசேவகர்
...ராமங்களில்தாம்
...றையில் சேவை
... என்பதைப்பற்
...ம், செய்முறை
...சிகளும் அவர்க
...டாயம் இருக்கப்
...டுமென்றுஇப்பயி
... அளிக்கவிருக்கும்
...னேற்றப் பகுதி
...ன திரு. எம் இரா
... தெரிவித்தார்.
...ரு பயிற்சிவகுப்பி
...ராமசேவகர்கள்
...ள்வார்களென்
...வொரு வகுப்புக்
... தொடர்ந்து 6
...சிகள் அளிக்கப்
...ம் திரு. இராமச்
...தெரிவித்தார்.
[வி. நி]

## கும்பாபிஷேகம்

காங்கேசன்துறை, செவ்

காங்கேசன்துறை குரக்கன்துறை வீரபத்திர குருசாமி புனரட்டபந்தன கும்பாபிஷேகம் இம்மாதம் 24-ந் திகதி புதன்கிழமை பகல் நடைபெறும்.

யாழ்ப்பாணம், புதன்

1966-ம் வருடத்துக்குமுந்திய வருடங்களிலும் பார்க்க 67-ம் வருடம் உப உணவுப் பொருட்கள் உற்பத்தியிலும் விற்பனவு இலாகாவின் முன்னேற்றத்திலும் அதிக முன்னேற்றம் காணப்பட்டது சுன்னகம், சாவகச்சேரி, கிளிநொச்சி ஆகிய இடங்களில் மரக்கறிவகைகள் மற்ற வருடங்களிலும் பார்க்க இவ்வருடம் மிகவும் பாராட்டத்தக்க முறையில் சேகரிக்கப்பட்டுள்ளது.

பின்வரும் விபரங்கள் எவ்விதம் உன்னதமாக மரக்கறிவகைகள் சேகரிக்கப் பட்டது என்பதை நிருபிக்கின்றன:-

| வருடம் | காய்கறி | பழவகை |
|---|---|---|
| 65/66 | 30,1208 ருத்தல் | 13,24,782 ருத்தல் |
| 66/67 | 60,6436 ருத்தல் | 14,91,426 ருத்தல் |

தக்காளிப்பழக் காலங்களில் 8 சதம்வரையில் தக்காளிப்பழத்தின் விலை குறைந்தபொழுது விற்பனவு இலாகா குறிப்பிட்ட விலையை[16,20 சதமாக] வைத்து வாங்கியது விற்பனவு இலாகா இப்படியாக விலையை நிர்ணயித்து வாங்கியதையிட்டு சில வியாபாரிகள், இதில் நஷ்டம் ஏற்படும்எனகுறைவாக நினைத்தபொழுதிலும் நினைத்ததிலும்பார்க்க அது மிகவும் திருப்திகரமான பலனைத்தந்துள்ளது. 325000 ருத்தல் பழங்கள் கிடைக்கும் என எதிர்பார்த்தனர். ஆனலும் 200,000 ருத்தல் பழங்களை விற்பனவு இலாகாவினர் வாங்கியிருக்கிறார்கள். இத்தொகை முன்னெப்பொழுதிலும் சேமிக்கப்படவில்லை என விற்பனவு இலாகாவின் புள்ளிவிபரங்கள் குறிக்கின்றன.

வடமாகாணத்தில் கிடைத்த இப்பழங்களை ஏற்றுமதிசெய்வதற்கு [இராணுவத்தினர்] தரைப்படையினர் தமது வாகங்களைத் தந்து உதவினர்கள் இந்த வாகனங்களின் உதவியைக் கொண்டு சேமிக்கப்பட்ட பழவகைகளை கொழும்பு கண்டியிலுள்ள குளிர்சாதன அறைகளுக்கு அனுப்பப்பட்டது

இப்படியாக நாம் உற்பத்தியைப் பெருக்குவதற்கு திட்டமிட்டு செய்ததனல் உற்பத்தி பெருகியதோடு மட்டுமல்லாது தக்காளிப் பழம்உற்பத்தி செய்வோருக்கும் மிகுந்த ஊக்கத்தைக் கொடுத்தது என்பதைக் கூட மறந்துவிடக்கூடாது.

முற்காலத்தில் உற்பத்தியாளர்களுக்கு பணம் வழங்கப்பட்டது. இப்படிக் கொடுக்கப்படும்போது உற்பத்தியாளர்களுக்கு தாமதமாகவே பணம் கிடைத்து வந்தது. இதனல் உற்பத்தியாளர்கள் பணம் பெறுவதில் மிகுந்த கஷ்டத்துக்குள்ளானர்கள் இக் கஷ்டத்தைப்போக்கி மக்கள் துரிதமாகப் பணத்தைப் பெறக்கூடியமுறையில் உடனுக்குடன் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கங்கள் முலம் பெறக்கூடியதாகச் செய்துள்ளது.

கொழும்பிலுள்ள குதிரைப்பந்தயத்திடலில் இருக்கும் சந்தையில் இங்குபெறப்படும் மரக்கறிகளை விற்பதற்கு வசதியாக இருந்தது. இச்சந்தை சென்றவருடம் ஜூன் மாதத்திலேதான் ஒழுங்கு செய்யப்பட்ட பொழுதிலும் மொத்தமாக 166254 ருத்தல் மரக்கறிகளும் பழங்களும் விற்கப்பட்டுள்ளது. கிழங்கு போன்றசில பொருட்களுக்கு கொழும்பிலே கிராக்கி இல்லாத போதிலும் தாராளமான அளவு பொருட்கள் அங்கு அனுப்பப்பட்டுள்ளன [ந. நி]

## தீவுப்பகுதியில் பொங்கல் விழா

ஊர்காவற்றுறை, செவ்

தமிழர்திருநாளாம் தைப்பொங்கல் தினத்தையொட்டி புங்குடுதீவு தமிழ்க் காங்கிரஸ் வாலிப முன்னணியினரால் சைக்கிளோட்ட, மருதனேட்டப் போட்டிகள் நடத்தப்பட்டது. வயதுவந்தவர்களுக்கான சைக்கிளோட்டப் போட்டி மாணவர்களுக்கானசைக்கிளோட்டப் போட்டி, மரதனேட்டப்போட்டி என மூன்று போட்டிகள் இடம் பெற்றன.

தீவுப்பகுதி தமிழ்க்காங்கிரஸ் பிரமுகர் திரு. என். சிவஞானம் ஊர்காவற்றுறை கோட்டடி மைதானத்தில் வயதுவந்தவர்களுக்கான சைக்கிள் ஓட்டப் போட்டியை ஆரம்பித்து வைத்தார். தீவுப்பகுதியின பல கிராமங்களிலிருந்தும் வந்த 15 வீரர்கள்இப்போட்டியில் பங்கு பற்றினர். மாணவர்களுக்கான போட்டியை புங்குடுதீவு கி.ச. தலைவர் திரு கே. வி. தம்பித்துரை ஆரம்பித்து வைத்தார்

## 1-ம்,3-ம் எதிரிகள் குற்றவாளிகள்

வல்வெட்டித்துறை, செவ்.

பருத்தித்துறையைச் சேர்ந்த இராசதுரை, பாலசுப்பிரமணியம், சபாரத்தினம் ஆகிய மூவரும் கடந்த வருடம் ஆடி மாதம் முதலாம் திகதி வியாபாரிமூலையைச் சேர்ந்த கே. எஸ். சிற்றம்பலம் என்பவருடைய வீட்டை உடைத்து 1000 ரூபா பெறுமதியான கம்பளம் பன்னீர்குப்பி, சந்தனக் கிண்ணம் ஆகியவற்றைத் திருடியதாக பருத்தித்துறைப்பொலிஸாரால குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. விக்னராசா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. விசாரணையின்பின்னர் மாஜிஸ்திரேட் 1-ம், 3-ம் எதிரிகளை குற்றவாளிகளாகக் கண்டு இருவரையும் இம்மாதம் 19-ம் திகதிவரை றிமாண்டில் வைக்கும்படி உத்தரவிட்டு ... ...

## பஸ் நிலைய திறப்பு விழா

வல்வெட்டித்துறை, செவ்.

வல்வெட்டித்துறையில் புதிதாக அமைக்கப்பட்ட பஸ் தரிப்பு நிலையத்தை நேற்று சம்பிரதாய முறைப்படி பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினம் திறந்துவைத்தார்.

வல்வெட்டித்துறைச் சந்தியிலுள்ள சனசமூக நிலையத்திற்கு முன்பாக அமைக்கப்பட்ட பஸ்தரிப்புநிலைய திறப்புவிழாவில் இ. போ. ச. முகாமையாளர் திரு. வேலுப்பிள்ளை, பட்டினசபைத்தலைவர் திரு. வி. இரத்தினவடிவேல் மற்றும் ... களும் கலந்து...

சுன்னகம்

## பட்டின சபை தேர்தல் நாளைநடைபெறும்

யாழ்ப்பாணம், புதன்

சுன்னகம் பட்டினசபையின் இரண்டாவது தேர்தல் நாளை நடைபெறும். 8 வட்டாரங்களைக் கொண்ட இச்சபையில் 3வது வட்டார உறுப்பினர் ஏகமனதாக தெரிவு செய்யப் பட்டுள்ளார்.

மிகுதி 7 வட்டாரங்களிலும் 19 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். ஒவ்வொரு வட்டாரத்திலும் மிகவும் கடுமையான போட்டிநிலவுகின்றது.

இப்பட்டினசபையின் வட்டாரங்கள் இம்முறை புதிதாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. [ந. நி]

## ரூ. 50000 பெறுமதியான பொருட்கள்

வல்வெட்டித்துறை, செவ்

வல்வெட்டித்துறையில் ஒரு வீட்டில் சுமார் 50,000 ரூபா பெறுமதியான 85 மூடை ஏலக்காய், 40மூடை கராம்பு ஆகியவற்றை வல்வெட்டித்துறை பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. சி. எஸ். விஜயதிலகா கண்டு பிடித்து இதுசம்பந்தமாக விசாரணை நடத்திவருகிறார்.

## விளையாட்டு மைதானம்

யாழ்ப்பாணம், செவ்

முன்னர் யாழ்ப்பாணம் உதைபந்தாட்டச் சங்கத்தின் விளையாட்டு மைதானமாக இருந்தபண்ணை மைதானத்தை யாழ்ப்பாண அரசாங்கஅதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா கொட்டடிமுன்னேற்றக்கழகத்தின் விளையாட்டு மைதானமாக வழங்கியுள்ளார்.

வெகுகாலமாக விளையாட்டு மைதானமின்றி கஷ்டப்பட்ட நிலைமையை அரசாங்க அதிபருக்கு மேற்படி கழகம் எடுத்து விளக்கியதற்கு இணங்க ... மைதானம் கொட்டடி முன்னற்றக்கழகத்தின் விளையாட்டு மைதானமாக வழங்கப்பட்டுள்ளது.

கொட்டடி முன்னேற்றக் கழகம் நேற்று முன்தினம் இம்மைதானத் திறப்புவிழாவைக் கொண்டாடினர்.

## ரூ. 300 அபராதம்

வல்வெட்டித்துறை, செவ்.

சக்கோட்டை என்னும் இடத்தில் தென்னந்தோட்டத்திற்குள் வைத்து 1,00,000 ரூபா பெறுமதியான நாற்பது மூடை சயிக்கிள் உறுப்புகளுடன் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட சி. பாலசுந்தரம் என்பவரை யாழ்ப்பாண சுங்க கலைக்டர் திரு. பத்திராஜ விமலதர்மா விசாரணை செய்தபின் ரூபா 300 அபராதம் விதித்துள்ளார்.

## பாராட்டுக் கூட்டம்

புலோலி, செவ்வாய்

பலவருடங்களாகபுலோலி அமெரிக்கன்மிஷன் பாடசாலையில் உப அதிபராகக் கடமையாற்றிய திரு. கே. பொன்னுத்துரை ஆசிரியர் பதவி உயர்வுபெற்று வவனியாப் பிரிவைச் சேர்ந்த 'பெரிய கோமரசன்குளக்' பாடசாலைக்கு தலைமை ஆசிரியராகச் சென்றுள்ளார். இவரின் சேவையைப் பாராட்டி புலோலி அமெரிக்கன் மிஷன் பாடசாலைமண்டபத்தில் ஓர் கூட்டமும் விருந்து உபசாரமும்நடைபெற்றன

## நாடும் நடப்பும்

''தமிழனகப்பிறந்த பெருமையை நான் எண்ணி எண்ணிப் பூரிப்படைகிறேன். பிறவி எடுத்த பெரும் பயனையும் அடைந்து விட்டதாகவே நான் நினைக்கிறேன்''

இரண்டாவது தமிழாராய்ச்சி மகாநாட்டுக்குச் சென்று திரும்பிய ஓர் அறிஞர் இப்படி மகிழ்ச்சி பொங்கக் கூறினர்! பிரயாணக்களைப்பும் அலைச்சலும் அவர் தோற்றத்தில் சிறு மாறுதலைக்காட்டுகிறது. ஆனல் அவர் உள்ளமோ நிறைந்துகிடக்கிறது.

தமிழாராய்ச்சி மகாநாட்டின் இறுதிநாள் நிகழ்ச்சியின்போது தமிழக முதல் அமைச்சர் அண்ணு ஆங்கிலத்தில் அரைமணி நேரம் நிகழ்த்தியசொற்பொழிவை சேர் சி. பி. டாக்டர் ராதாகிருஷ்ணன் ஆகியோருடன் அவர் ஒப்பிட்டதுடன் அண்ணு அறிஞர்தான் என்றார்.

தமிழாராய்ச்சி மகாநாட்டுப் பிரதிநிதிகளுள் ஒருவராகச் சென்ற அந்த அன்பர் சிதம்பரத்தில் தங்களுக்கு அளிக்கப்பட்ட வரவேற்பைப்பற்றி வர்ணிக்கவே வார்த்தை இல்லை என்கிறர்.

தமிழாராய்ச்சி மகாநாடு வெறும் மகாநாடல்ல, தமிழ் திருவிழா, பெருவிழா-இனி என்வாழ்க்கையில் இப்படி ஒரு விழாவைப் பார்க்கமுடியுமா என்று நினைக்கவில்லை என்கிறர்.

அவர் கொடுத்து வைத்தவர். பாக்கியசாலி-.

இந்தமகாநாட்டில் நமது அமைச்சர் ஆங்கிலத்திலேயே பேசியிருந்தால் நன்றாக இருந்திருக்கும் என்றும் அவர் சொன்னர். வானெலியில் அவரது பேச்சைக் கேட்டபோது நானும் அப்படித்தான் நினைத்தேன்.

ஃ ஃ

'பூம்புகாரில் ஒரு நாள்' கவிதைப் போட்டியில் முதல் மூன்று இடங்களையும் பெறுபவர்களுக்குத்தான் பரிசு வழங்குவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. மற்றைய எழுவருக்கும் சான்றிதழ்கள் வழங்க ஒழுங்குகள் செய்யப்பப்பட்டிருந்தன. ஆனல் ஆயிரத்து இருநூறு கவிஞர்கள் கலந்துகொண்ட போட்டியில் பத்துப்பேரே சிறந்த கவிஞர்களாகத் தெரிவு செய்யப்பட்டதால் இதர ஏழு பேருக்கும் சான்றிதழ்கள் வழங்குவதுடன் பரிசும் அளிக்க பின்னர் முடிவு செய்து, பரிசும் வழங்கப்பட்டது

தங்கம் அல்லாவிட்டாலும் தங்கநிறத்தில், கனமான பதக்கம் நீல, சிவப்பு நாடாவில் மாலைபோன்று கோர்த்த பதக்கத்தை இலங்கையைச் சேர்ந்த கவிஞர் 'அம்பி' [இ. அம்பிகைபாகன்] யின் கழுத்தில் நடிகர் எம். ஜி. ஆர். பரிசளிப்பு விழாவில் அணிவித்து கௌரவித்தார். இதே பதக்கத்தையும் சான்றிதழையும் நேரில்சென்று பெறும் வாய்ப்புக் கிடைக்காத நமது மற்றொரு கவிஞரான இ. நாகராஜன் அதை பண்டிதர் கா. பொ. இத்தினத்திடமிருந்து பெறுவார். ஆமாம் மகாநாட்டில் கலந்துகொண்ட பண்டிதர், நாகராஜன் சார்பில் அதை பரிசளிப்பு விழாவில் பெற்றுக் கொண்டார்.

—ஊர்சுற்றி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தோட்டத்தில் கிடந்தன: 150 உயர்ரக சேலைகள்

உடுப்பிட்டி, செவ். தோட்டமொன்றில் தேடுவாரற்றுக் கிடந்த 150 விலையுயர்ந்த சேலைகள் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டன. வல்வெட்டித்துறை, ஊரிக்காடு என்னுமிடத்திலுள்ள தோட்டமொன்றில் கள்ளக்கடத்தல் சேலைகள் ஒளித்து வைக்கப்பட்டிருப்பதாக இராணுவத்தினருக்கு இரகசியத் தகவல் கிடைத்ததைத் தொடர்ந்து வல்வெட்டித்துறைப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. விஜயதிலகாவின் தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டியினர் ஒரு பெண்ணுக்குச் சொந்தமான வீட்டுத் தோட்டத்தில் திடீர் சோதனையிட்டபோது இந்தியாவிலிருந்து கடத்திவரப்பட்டதாகக் கருதப்படும் 150 டெக்கா மணிபுரி சேலைகளைக் கண்டுபிடித்துக் கைப்பற்றிச் சென்றுள்ளனர்.

தோட்டக் சொந்தக்காரப் பெண், இச் சேலைகள் பற்றித் தமக்கெதுவும் தெரியாது எனமறுத்துள்ளாராம். இது சம்பந்தமாகப் பொலிஸார் தொடர்ந்து விசாரணை செய்து வருகின்றனர்.

## சைக்கிள் பாகங்கள் கொண்ட 20 பார்சல்கள்

உடுப்பிட்டி, செவ்வாய் ஆல்வாய், திக்கம் கடற்கரையில் அனாதரவாகக் கிடந்த சைக்கிள் உதிரிப் பாகங்களைக் கொண்ட 20 பார்சல்களும், சேலைகள், பட்டு வேட்டி, சால்வைகள் அடங்கிய 5 பார்சல்களும் வல்வைப்பொலிஸாரினாலும் இராணுவத்தினராலும் கைப்பற்றப்பட்டுள்ளன. கடத்தல் நடைபெறுவதாகத் தகவல் கிடைத்ததைத் தொடர்ந்தே உடனடியாக ஸ்தலத்திற்கு விரைந்த வல்வெட்டித்துறை பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு விஜயதிலக்கா தலைமையில் சென்ற கோஷ்டியினரும், இராணுவத்தினரும் பிரஸ்தாப 25 பார்சல்களையும் கைப்பற்றினராம். கைப்பற்றப்பட்ட கடத்தல் பொருட்கள் சுங்க இலாகாவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக பொலிஸார் புலன் விசாரணை செய்து வருகின்றனர்.

## இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம்

**புதன் 17-1-68**

செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00

**344 மீற்றர் & 61 மீற்றர்**

6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை 6-40 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-25 தினக்குறிப்பு 7-30 குரல்வகை, 8-00 இசைவேளை.

**344 மீற்றர் & 49 மீற்றர்**

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

**344 மீற்றர் & 61 மீற்றர்**

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 மாணவர் மன்றம் — வானொலி அக்கா.

இரவு 6-15 பாட்டு — சரோஜினி தனபாலசிங்கம், 6-45 பா வளம், 7-00 கிராமசஞ்சிகை 7-30 சுங்குமம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 புல்லாங்குழலிசை — ரி. பி யேசுராசன், 10-00 நேயர்விருப்பம்.

## புதிய நிர்வாகிகள்

புன்னாலைக்கட்டுவன், செவ். உருப்பராய் இந்துக்கல்லூரி அரசியல் சரித்திர மன்றப் புத்தாண்டு நிர்வாக உறுப்பினராகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

காப்பாளர் கல்லூரி அதிபர், தலைவர் குரை. மனோகரன், உபதலைவர் திரு. பொ. சற்குணநாதன், செயலாளர் திரு சு. சுந்தரமகேசன், உபசெயலாளர் திரு. சோ. குக்தாஸ், தனாதிகாரி திரு த. சிவலோகநாதன் உபதனாதிகாரி செல்வி லீலாவதி.

## 'சாயிபாபாவின் ஆத்மசக்தி'

யாழ்ப்பாணம், செவ். "இவ்வுலகில் இப்பொழுது முக்கிய இடம் வகித்துள்ள விஞ்ஞானிகளும் பல அற்புதங்களைச் செய்கிறார்கள். ஆத்மீக சக்தியுள்ள கடவுள் அவதாரங்களும் அற்புதங்களைச் செய்துகொண்டிருக்கிறார்கள். ஆனால் பகவான் சத்தியசாயிபாபாவின் அற்புதங்களுக்கும் விஞ்ஞானிகளின் அற்புதங்களுக்கும் எவ்வளவோ வேறுபாடுண்டு. விஞ்ஞானிகளுடைய சாதாரணசித்து, பகவான் சத்தியசாயிபாபாவினுடையது ஆத்மசக்தியாகும்."

யாழ்ப்பாணம் இந்து கலாசார நிலையத்தின் ஆதரவில் யாழ். இந்துக் கல்லூரி பிரார்த்தனை மண்டபத்தில் நடைபெற்ற 'பகவான் சத்ய சாயிபாபாவின் ஆத்ம

(7-ம் பக்கம் பார்க்க)

"சூரியன் மார்க்"

வாசனை சந்தன வில்லைகள்

வாசனை சந்தனப்பவுடர்

கோவில் தேவைகளுக்கும்
திருமணம் முதலிய வைபவங்களுக்கும் உகந்தது.

இடைக்குமிடம்:

சுந்தரம் பிரதர்ஸ்

73, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.




செறிந்த சுவை, சிறந்த கலவை,
நிறைந்த புகை பிடி இன்பம்...
இவை தரும்
திருப்தியின் சின்னமே

திரீரோஸஸ்

இலங்கையின் அபிமான சிகரெட்

இலங்கையில் தயாரிப்போர்:
சிலோன் [illegible] கம்பனி லிமிடெட்

P756

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈவினை இளைஞர் கழகம் சாம்பியனாகத் தெரிவு

குரும்பசிட்டி, செவ்

குரும்பசிட்டி உதயதாரகை மன்றத்தினரின் 10-வது உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இம்முறை ஈவினை பறக்கும் இளைஞர் விளையாட்டுக்கழகம் முதற்பிரிவு சாம்பியன் ஸ்தானத்தைப் பெற்று 'சிங்கராஜா வெற்றிக்கிண்ணத்தை சுவீகரித்துக்கொண்டது. இரண்டாம் பிரிவில் இதே சுற்றுப்போட்டி அமைப்பில் ஏழாலை பாலர் விளையாட்டுக் கழகமும் போயிட்டி மகாஜன விளையாட்டுக்கழகமும் சாம்பியன் கோஷ்டிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன. தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மைதானத்தில் சாம்பியன் இறுதி ஆட்டங்கள் முடிந்தபின் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் வெற்றியீட்டிய கோஷ்டிகளுக்கு பிரதம விருந்தினராக கலந்துகொண்ட வடமாகாண விளையாட்டு அதிகாரி திரு. பி. யேசுதாசன் வெற்றிக் கிண்ணங்களை வழங்கினர். மயிலிட்டி கிராமசபைத் தலைவர் திரு எஸ் அருணாசலம் பரிசளிப்பு விழாவிற்கு தலைமை வகித்தார்.

குப்பிளான் விக்னேஸ்வரா சனசமூக நிலையமும் ஈவினை பறக்கும் இளைஞர் விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்ட திகில் மிக்க முதற்பிரிவுப் போட்டியில் குப்பிளான் கோஷ்டி 4—7 கோல்களால் தோல்வியுற்றது.

போயிட்டி மகாஜன விளையாட்டுக்கழகமும் ஏழாலை பாலர் விளையாட்டுக்கழகமும் கலந்துகொண்ட இரண்டாம்பிரிவு ஆட்டத்தில் இரு கோஷ்டிகளும் தலா ஒவ்வொரு கோல் போட்டுக்கொண்டமையால் எவருக்கும் வெற்றிதோல்வியின்றி ஆட்டம் முடிவடைந்தது.

பெருந்திரளான மக்கள் கலந்துகொண்டு பார்வையிட்ட இச்சாம்பியன் போட்டிகளில் கலந்துகொண்டு விளையாடிய விரர்கள் சுன்னாகம் பொலிஸ் நிலைய சப். இன்ஸ்பெக்டர் திரு. எம். குணரத்தினவுக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டனர்.

## சேலைப் பார்சல்கள் பிடிபட்டன

வல்வெட்டித்துறை, செவ்.

சந்தேகத்தின் பேரில் வல்வெட்டித்துறை பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு விஜயதிலகா தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டியொன்று வல்வெட்டித்துறைபிரதான ரோட்டால் சென்ற காரை சோதித்த போது அதிலிருந்து ஐந்து காஞ்சிபுர சேலைப் பார்சல்கள் இருக்கக் கண்டு பிடிக்கப்பட்டது. பார்சலை பறிமுதல் செய்தும் காரையும் அதிலிருந்த மூன்று பேர்களையும் கைது செய்து சுங்க இலாகாவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக விசாரணை நடைபெற்று வருகிறது.

## 'வெற்றி தோல்விபற்றி அக்கறைகாட்டக் கூடாது'

சங்கானை செவ்.

"கிராமப்புறங்களில் உள்ள வாலிபர்கள் நேயற்ற வாழ்வாகவும் திடகாத்திர சாலிகளாகவும் வாழ்வதற்கு விளையாட்டு இன்றியமையாததொன்று. தினமும் தேகப்பயிற்சியில் ஈடுபட்டால் உடல் உறுதி பெறுவதுடன் மூளையும் உறுதி பெற்று எதிர் காலத்தில் சிறந்த ஒரு சந்ததியினரையும் உருவாக்க ஏதுவாகும்"

உதைபந்தாட்ட இறுதி வெற்றிப் போட்டிக்கு பிரதம விருந்தினராகக் கலந்து உரையாற்றிய வணக்கத்திற்குரிய இ. எ. பெஞ்சமின் குறிப்பிட்டார்.

மேலும் அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது: வெற்றி கொண்டவர் பெருமை கொள்ளவும் இடமில்லை. தோல்வி கொண்டவர்கவலைகொள்ளவும் இடமில்லை, ஆனால் தோல்வி ஒரு முறை வெற்றி பலமுறை என்பதை பிஞ்சு உள்ளம் படைத்த ஒவ்வொருவரும் மனதில் கொண்டு செயல்பட்டால் எதிலும் வெற்றி பெறுவது நிச்சயம்

அரசாங்க விளையாட்டிற்கென மந்திரி ஒருவரை நியமித்து அவர் மூலம் வட்டார ரீதியாககாரியாதிகாரிகள் மூலம் விளையாட்டுப் போதனாசிரியர்களைத் தேர்ந்தெடுத்து பெருந்தொகையான பணத்தை வழங்கிவருகிறது. இதனை நாம் நல்ல வழியில் பயன் படுத்திக் கொள்ள வேண்டும்.

## அன்னமிட்ட வீட்டிலே . . .

உடுப்பிட்டி, செவ்வாய்

அல்வாயில் பட்டப்பகலில் திருட்டுப்போன வானொலிப் பெட்டி தொண்டர்படைத் தலைவரின் முயற்சியினால் கரவெட்டியில் வைத்துக் கண்டு பிடிக்கப்பட்டது.

அல்வாய் தெற்கைச் சேர்ந்த இராமநாதன் என்னும் ஆசிரியரொருவரிடம் இளைஞனொருவர் தான் படித்து விட்டு வேலையற்றிருப்பதாகவும், தனக்கு வேலையெதுவும் தந்து காப்பாற்றுமாறும் வேண்டவே அவர்மீது இரக்கங்கொண்ட ஆசிரியர் அந்த இளைஞனை வீட்டைக் கவனிக்கும் வேலைக்குச் சேர்ந்தார், அவரது மனைவியும் ஆசிரியையான படியினால் இருவரும் பாடசாலைக்குச் சென்றனர். பாடசாலை முடிந்து கணவனும் மனைவியும் வீடு திரும்பியபொழுது தமது 600 ரூபாய் பெறுமதியான குறுணடிக் வானொலிப்பெட்டியும், புதிதாக வேலைக்குச் சேர்ந்த இளைஞனும் காணாமற்போய்விட்டதை யறிந்து திடுக்கிட்டனராம். திருடிய வானொலிப்பெட்டியை அந்த இளைஞர் கடையொன்றிற்கு விற்க முயலுகையில் தொண்டர்படைத் தலைவர் திரு. மிக்கேல்ராஜா கண்டுபிடித்து கரவெட்டி வடக்கு கிராமசேவையாளர் திரு. ஆ. தாமோதரம்பிள்ளையிடம் ஒப்படைத்தார். பிரஸ்தாப ஆசிரியர் அவ்விளைஞன் செய்த குற்றத்தை மன்னிப்பதாகக் கூறவே கிராமசேவகர் இளைஞனை எச்சரித்துப் புத்திமதிகள்கூறி அனுப்பினர்.

——

## சாயிபாபாவின்...

[6-ம் பக்கத் தொடர்ச்சி]

வார்த்த விளக்கம்" என்பது பற்றிய கருத்தரங்கில் தலைமை வகித்துப் பேசிய திரு. எஸ் யு. சோமசேகரம் மேற்கண்டவாறு கூறினார்

திரு. என். செல்லப்பா பிள்ளை பேசுகையில் இறைவன் அடியை நாம் அடைவதற்கு கர்மம், பக்தி, ஞானம் என மூன்று பாதைகள் உண்டு. இந்த மூன்றுபாதைகளிலும் மிகச்சிறந்த பக்தி மார்க்கத்தாலேயே மக்கள் பக்குவமடைய வேண்டும். இந்தத் தத்துவத்தை பகவான் சத்யசாய்பாபா அருமையாக எடுத்து விளக்கினர். [வி. நி.]


50 சதத்துடன் விரைவில் செல்வந்தராகுங்கள்

ஒவ்வொரு வாரமும், நூற்றுக்கு மேற்பட்டவர்கள் விரைவில் செல்வந்தராகி வருகின்றனர்.



அடுத்து உங்கள் முறை ஆகலாம்

50 சதத்திற்கு நீங்கள் புத்தம் புதிய கார் ஒன்றையும் பெருந் தொகைக்கான காசோலையையும் பெறலாம்.

அதிர்ஷ்டத்தை எதிர்பார்த்து இராதீர்

உங்கள் தேசிய லொத்தர் சுவீப் டிக்கெட்டுகளை இன்றே வாங்குங்கள்.

உங்களுடைய அடுத்த பெரியசுவீப்புகளில்

முதல் பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகளுக்கு அவர்களின் பரிசுத் தொகையிலிருந்து கீழ்க்காணும் கார்களை வாங்கச் சந்தர்ப்பம் அளிக்கப்படும்.

சிட்டிழுப்பு இல. 179. தேதி 1-2-68 புத்தம் புதிய மொரிஸ் மினிமோக் ரூ. 9.100/-*



சிட்டிழுப்பு இல. 179

சிட்டிழுப்பு இல. 180. தேதி 8-2-68 — புத்தம் புதிய அஸ்டின் A 60 கேம்பிரிட்ஜ் ரூ. 18,200 -*



சிட்டிழுப்பு இல. 180

*இவையாவும் ரூபாமதிப்புக்குறைக்கப்படுவதற்குமுன்னிருந்த சாதாரண கொம்பனி அட்டவணை விலைகள்: வரிகளும் சேர்க்கப்பட்டவை

இந்தக் கார்களை வாங்குவதற்கான சந்தர்ப்பம் சிட்டிழுப்புக்குப் பின் 14 நாட்களுக்குமட்டும் வழங்கப்படும்

ஞாபகத்திலிருக்கட்டும்:-

நீங்கள் வாங்கும் ஒவ்வொரு தேசிய லொத்தர் சுவீப் டிக்கெட்டும், அதிர்ஷ்டத்தின் வாயிலுக்கு உங்களை அழைத்துச் செல்கிறது.

50 சதம் முதலீடு செய்து பெரும் செல்வம் தேடுங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிகிச்சை பெறுகின்றனர்

நல்லூர், செவ்வாய்

தைப்பொங்கல் தினத்தன்று யாழ்ப்பாணத்தில் பட்டாஸ் கொழுத்தியவர்களில் எட்டுப்பேர் யாழ் அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதித்து சிகிச்சைபெற்றுவருகின்றனர்.

இவர்களிற்சிலர் கடுமையான காயத்துக்குள்ளாகியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.


**ராஜா**

(யாழ்ப்பாணம்)

தினசரி 2-30, 6-30, 9-30

போயா தினங்களில் 4 காட்சி

எம். ஜி. ஆர்.-ஜெயலலிதா நடித்த

**காவல்காரன்**



**நியூ காலிங்கன்**

(இணுவில்)

தினசரி 6-30, 10-00 மணி

விடுமுறை தினங்களில் 2-30

ஜெய்சங்கர்—ஜமுனா நடித்த

**குழந்தையும் தெய்வமும்**



**MANOHARA**

JAFFNA

Last Two Days only

Daily at 6-30 & 9-30 p. m

Shammi Kopoor

Rajshiree

in

JANWAR

(Hindi)

(Fastmen color)



**REGAL** JAFFNA

4-40, 7-00 & 9-45 p.m.

**WOMEN of the WORLD**

(adults only)


## "தேசிய அரசாங்கம் முஸ்லிம் மக்களைப்புறக்கணித்துவிட்டது"

கல்முனை, செவ்வாய்

'தேசிய அரசாங்கம் முஸ்லிம்மக்களைப் புறக்கணித்துவிட்டது. புறக்கணித்த இந்த அரசாங்கத்துக்கு முஸ்லிம் மக்கள் தகுந்த பாடம் கற்பிக்க, இத்தேர்தலில் சுதந்திரக்கட்சியை ஆதரிக்க வேண்டும்.'

கல்முனைக்குடி கடற்கரை கொடியேற்றப்பள்ளிமைதானத்தில் நடந்த தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் இலங்கை இஸ்லாமிய சோஷலிஸ்ட் முன்னணித் தலைவர் டாக்டர் பதியுதீன் மஹ்மூத் பேசும்போது மேற்கண்டவாறு கூறினார்.

இன்று நாட்டில் அத்தியாவசிய பொருட்களுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டால் மக்கள் அவதிப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

மூதூர் இரண்டாவது எம். பி. ஜனாப் அப்துல் மஜீத் பேசுகையில், சமுதாய முன்னேற்றத்திற்கு பாடுபட இளம் இஸ்லாமிய வாலிபர்கள் ஒன்றுபட்டு உழைக்க வேண்டும் என்று கூறினார்.

செனட்டர் ஏ. ஆர் எம். ஹமீம், ஜனாப் எம். சி. அகமது உட்பட மற்றும் பலர் பேசினர்.

## பிரார்த்தனைக் கூட்டம்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாண கொழும்புத்துறையோகசுவாமிகள்ஞாபகார்த்த பிரார்த்தனைக்கூட்டம் இன்றுமாலை பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறும்.

## மரண அறிவித்தல்

பிரபல வைத்தியரும் சோதிடரும் ஆகிய திரு. ஜே. ஆர். நடராசா காலமாகிவிட்டார். அன்னாரின் பூதவுடல் ஈமக்கிரியைக்காக இன்று (17-1-68) பி. ப. 3 மணிக்கு செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். விலாசம்: 12/2, மருதடிவீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 2084

## 'துப்பாக்கிச்சூடு...

[1-ம் பக்க தொடர்ச்சி]

அவர்களில் இருவரான பசுபதி, தியாகராசா ஆகிய இருவரும் கையில் துப்பாக்கி வைத்திருந்தனர். சின்னத்தம்பி கையில் கத்தி அல்லது பொல்லுப்போன்ற ஆயுதம் வைத்திருந்தார். சின்னத்தம்பி தனது கையில் வைத்திருந்த ஆயுதத்தை எனது தகப்பனாரின் தலையை நோக்கி ஓங்கி வீசினார் அது தலையில் பட்டதா இல்லையா என்பது எனக்குத் தெரியாது. அந்நேரம் துப்பாக்கிச் சூடுபட்டு இறந்தவர் கிழே விழுந்தார். அதைத் தொடர்ந்து மேலும் ஒரு வெடிச்சத்தம் கேட்டது. பின்னர் மூவரும் ஓடிவிட்டனர். நான் தகப்பனாருகில் சென்று பார்த்தபோது அவர் வாயிலிருந்து இரத்தம் வழிந்தது. உடனே பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச்சென்று பின்னர் யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரில் அனுமதித்தோம். மறுதினம் அங்கு அவர் காலமானார்.

விசாரணையில் முகமளித்திருந்த கே. கே. எஸ். ஏ. எஸ். பி. லியனகே சங்கானை இஸ்பெக்டர் டயஸ் ஆகியவர்கள் சாட்சிகளை ஆஜர் செய்தனர். இறந்தவரின் நலன்களை வழக்கறிஞர் திரு. ஆர். ஜே. செல்வரத்தினம்கவனித்துக்கொண்டார்.

சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட ஏ தியாகராசா என்பவர் இன்று மாஜிஸ்திரேட் முன் ஆஜர் செய்யப்பட்டார். அவரை 23-ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க மாஜிஸ்திரேட் உத்தரவிட்டார். மற்ற இருவரையும் பொலிசார் தேடுகின்றனர்.

இக்கொலையைத் தொடர்ந்து சங்கானைப் பகுதியில் பொலிசார் மேலும் அசம்பாவிதங்கள் ஏற்படாமல் எச்சரிக்கை நடவடிக்கைகள் எடுத்துள்ளனர்.

## நூறு ரூபாய் அபராதம்

வல்வெட்டித்துறை, செவ்வாய்

இலங்கை போக்குவரத்துச் சபையைச் சேர்ந்த பஸ் கண்டக்டரான கே. குணவர்த்தனா என்பவர் இ.போ.ச. பஸ் சாரதியான எஸ் ஜயசிங்கா என்பவருக்கு பருத்தித்துறை பஸ் டிப்போவில் வைத்து கம்பியால் அடித்து அவரதுபற்களை உடைத்ததாககுற்றம்சாட்டி தொடரப்பட்ட வழக்கு பருத்தித்துறை மாஜிஸ்டிரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

விசாரணைமுடிவில் மாஜிஸ்டிரேட் எதிரியான குணவர்த்தனவை குற்றவாளியாகக் கண்டு 100 ரூபா அபராதம் விதித்தார். அபராதம் கட்டத்தவறின் நாலுவாரச் சிறைத்தண்டனையையும் விதித்துள்ளார். ஆப்பீல் செய்வதாக இருந்தால் 1000 ரூபா பிணையில் செல்லுமாறு கட்டளையிட்டார்.

## டால்மியாபுரம்

சென்னை, ஜன. 16

டால்மியபுரத்தின் பெயரை கல்லக்குடியென்று மாற்றுவதற்கு தமிழக அரசு தொடர்ந்து மத்திய அரசைவற்புறுத்திவரும் என்று பொதுப் பணித்துறை மந்திரி [illegible] தெரிவித்துள்ளார்.

## யாழ். கச்சேரிக்கு முன்னால் உண்ணாவிரதம் ஆரம்பித்தனர்

### கோரிக்கையைப் பெற புதிய போராட்டம்

யாழ்ப்பாணம், புதன்

ஐக்கிய இலங்கை ஸ்தலஸ்தாபனதொழிலாளர் சங்க வட பிரதேசக் கிளை உறுப்பினர்கள் தங்கள் கோரிக்கைகளைப் பெறுவதற்காக அமைதியான முறையில் ஒரு புதிய போராட்டம் நடத்த தீர்மானித்திருந்தனர்.

இத் தீர்மானத்தின்படி நேற்று யாழ்ப்பாணம் கச்சேரிக்கு முன்னால் உண்ணாவிரதம் அனுஷ்டிக்க ஆரம்பித்தனர்.

இவர்கள் ஸ்தலஸ்தாபன அமைச்சர் திரு. எம். திருச்செல்வத்துக்கு தங்கள் குறைகள் பற்றி பேச்சுவார்த்தைகள் நடத்துவது சம்பந்தமாக ஒரு கடிதம் எழுதி இருந்தார்கள். ஆனால் இக்கடிதத்துக்கு அமைச்சரிடமிருந்து இதுவரை பதில் கிடைக்கவில்லை என்று கூறப்படுகிறது.

இது சம்பந்தமாக யாழ்ப் மாவட்ட பிரதிநிதி திரு. பழனி கூறுவதாவது! சங்க ஊழியர்களின் குறைகளை நிவர்த்தி செய்வதற்கு ஸ்தலஸ்தாபன அமைச்சருடன் பேச்சுவார்த்தை நடத்த முயற்சித்து பயன் கிடைக்காமல் போனதால் அமைதியான முறையில் போராட்டம் நடத்தி நமது குறைகளுக்கு தீர்வுகாணதீர்மானித்திருக்கிறோம்.

வேலைநிறுத்தம் செய்துமக்களுக்கு இன்னலைக் கொடுக்க விரும்பவில்லை என்றும் சங்கத்தைச்சேர்ந்த உறுப்பினர்கள் இம்மாதம் 15-ந் திகதிமுதல் கறுப்புப்பட்டி அணிந்து துக்கதினம் அனுஷ்டித்து வருகிறார்களென்றும் கூறினார். (ந.நி.)

## செய்திச் சுருக்கம்

### பள்ளத்தில் வீழ்ந்தார்

விறகு வெட்டச் சென்ற இளைஞரொருவர் 700 அடி பள்ளத்தில் தவறி வீழ்ந்து மரணமானார். இச்சம்பவம் அம்பிட்டிகத்தை தோட்டத்தில் நடைபெற்றுள்ளது. சின்னன் என்ற பெயரையுடைய இவ் வாலிபன், பெரிய மலைச்சரிவு ஒன்றின் மரத்தின் கிளையொன்றை வெட்டும்போது தற்செயலாக அவர் பிடித்திருந்த மற்றொரு கிளை முறிந்துவிடவே உருண்டு பள்ளத்தில் வீழ்ந்துவிட்டாராம். மணமாகாத இவ் வாலிபருக்கு 23 வயது.

### விஞ்ஞானக் கல்வி

கொழும்பு பகுதிகளில் உள்ள பாடசாலைகளின் தமிழ் பிரிவுகளில் கல்வி பயிலும் மாணவிகளின் வசதிக்கென ஜி சி. ஈ. வகுப்புகளில், விஞ்ஞான பாடங்களைப் போதிக்க கல்வி அமைச்சு ஆலோசனைசெய்து வருகிறது. இவ்வகுப்புகளில் போதியளவு தமிழ் மாணவிகள் காணப்பட்டால் அப்பாடசாலைகளில் விஞ்ஞான வகுப்புகளை நடத்துவதற்கான சாத்தியக்கூறுகள் பற்றி தாம் ஆராயவிருப்பதாக கொழும்புப்பகுதிகல்வி டைரக்டர், தமிழர் கல்வி பொது நலச்சங்கத் தூதுக் குழுவிடம் தெரிவித்தார்.

### கடமைகளைசெய்தால்

'நமதுகடமைகளை திறமையாக நம்பிக்கை விஸ்வாசத்தோடு செய்யும்போது உரிமைகள் தாமாகவே கிடைக்கும். ஆகையினால் நாம், நம்மைக் கேலிக்கு உரித்தானவர்களாக்கக் கூடாது' என்று இலங்கைஹரிஜன யூனியன் கோணவல எம். கே. சி. லெதர் தொழிற்சாலை கிளை அங்குரார்ப்பணக் கூட்டத்திற்கு தலைமை வகித்துப் பேசிய திரு. எஸ். துரைராஜா கூறினார்.

## மாவட்டசபை...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இம்மாதம் 30-ந் தேதிக்கு முன், இக் கோரிக்கையை நிறைவேற்ற தமிழரசுக் கட்சி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும், அப்படி எடுக்கத் தவறினால், போராட்டத்தில் குதிப்பதற்கான தீர்மானத்தை அமுல் நடத்தவேண்டுமென்றும், வாலிப முன்னணி கோரியுள்ளது.

திரு. கே. திருநாவுக்கரசு தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், தமிழ் மக்களை எதிர்நோக்கியுள்ள மற்றும் விஷயங்கள்பற்றியும் ஆராயப்பட்டன. தமிழரசு வாலிப முன்னணியின் பொதுச்சபைக்கூட்டம் இம்மாதம் 28-ம் திகதி நடைபெறும்.

## வேலைக்குத் திரும்பினர்

கொழும்பு, செவ்வாய்

வேலைநிறுத்தங்களில் இறங்கியிருந்த பல்வேறு ஸ்தாபனங்களையும் சேர்ந்த ஊழியர்கள் இன்று வேலைக்குத் திரும்பினார்கள்.

ஏற்றுமதி இறக்குமதி வேலைகள், வேலைநிறுத்தம் கைவிடப்பட்டதைத்தொடர்ந்து வழமையான நிலையை அடைந்துள்ளதாக அரசாங்கத்தரப்பில் அறிவிக்கப்பட்டது.

காஸ் கம்பனியில் வேலைநிறுத்தத்தில் இறங்கியிருந்த ஊழியர்கள் அனைவருமே வேலைக்குந் திரும்பிவிட்டனர் என்றும்' இன்னும் சில தினங்களில் அங்கு மாமூல் நிலைமை ஏற்பட்டுவிடுமென்றும் அந்தக் கம்பனியின்ஒரு நிர்வாகஸ்தர் தெரிவித்தார்

ஒட்டல்களில் வேலைநிறுத்தத்தில் இறங்கியிருந்தவர்களும்வேலைக்குத் திரும்பிவிட்டதாட் தால் அங்கும் வழமையான நிலைமை ஏற்பட்டுவிட்டதாக அறிவிக்கப்பட்டது.

### கல்வி

அளவெட்டி அருணோதயக் கல்லூரியில் க. பொ. த. உயர்தர கலைப்பிரிவு[G.C.E. (A. L) Arts] வகுப்புகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன சேரவிரும்புவோர் அதிபருடன் தொடர்பு கொள்ளவும். அதிபர், அருணோதயக் கல்லூரி அளவெட்டி. 1914

### காணவில்லை

குணத்தின் மகன் ஜேசாந்யோ என்னும் 5 வயது ஆண்பிள்ளையை இன்று காலை 9 மணி தொடக்கம் காணவில்லை. கடைசியாக வெள்ளைச்சட்டை அணிந்திருந்தார். வலது நெற்றியில் காய அடையாளமுண்டு. மெலிந்தவர். கண்டவர்கள் 74, கஸ்தூரியார் ரோட் என்னும் விலாசத்திற்கு தொடர்பு கொள்ளவும். 1915


**இப்பொழுது நடைபெறுகிறது**

கிங்ஸ்லி (கொட்டாஞ்சேனை) பிளாஸா (கொழும்பு)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

விஜயா (மட்டுநகர்) ஸ்ரீகிருஷ்ணா (திருமலை)

லிடோ (பொறளை) மொடேர்ன் (பதுளை)



எம். ஜி. ஆர்.

சரோஜா தேவி

அசோகன்

நாகேஷ்

மற்றும் பலர் நடித்த

சரவணா பிலிம்ஸ்

**படகோட்டி**


இப்பத்திரிகை 'ஈழநாடு, லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1968-ம் ஆண்டு ஜனவரி மாதம்17-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org